இந்து, கிறிஸ்தவ
மணப் பெண்களை
நவீன முறையில்
அலங்காரம் செய்யவும்
Facial Bleaching,
Eyebro Shaping
Waxing and Hair Cuts
செய்து கொள்ளவும்
YOGI
BEAUTY PARLOUR
[ONLY LADIES]
71, நாயன்மார் வீதி,
நல்லூர்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

பிறந்த நாள், திருமண
வைபவங்களுக்கு
Icing Cake, Rich Cake,
Love Cake
போன்றவை செய்வதற்கு
YOGI
HOME SCIENCE
ACADEMY
71, நாயன்மார் வீதி,
கச்சேரி - நல்லூர் வீதி,
நல்லூர்

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 25 ஞாயிற்றுக்கிழமை (11 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 15

# வங்காலையில் 4 படையினர் பலி!

# காவலரண்கள், விடுதிகள் அழிப்பு!!

## புலிகள் அதிகாலை அதிரடித் தாக்கு

யாழ்ப்பாணம், டிசம்பர் 11

மன்னார் மாவட்டம் வங்காலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் படையினர் நிலைகள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய அதிவேக அதிரடித் தாக்குதலில் குறைந்தது 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

படையினரின் மூன்று காவலரண்களும், இரு விடுதிகளும் முற்றாக அழிக்கப்பட்டன.

நான்கு நவீன ரகத் துப்பாக்கிகள் உட்பட பெருமளவு இராணுவத் தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

சுமார் 5 நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்த அதிவேக அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் உயிரிழந்தனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

படையினரின் தொடர் காவலரண்களில் மூன்றும், இராணுவத்தினர் பயன்படுத்தி வந்த இரு வீடுகளும் அழிக்கப்பட்டன.

இந்த வெற்றிகரத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் போராளிகள் மூவர் வீரச்சாவடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

★ கப்டன் மரகதன் அல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வங்காலையில் நேற்று கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், டிச. 11

வங்காலையில் நேற்று நடத்தப்பட்ட அதிவேக அதிரடித் தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய இராணுவ தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ரீ-56 இரண்டு ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரீ-56 ஒன்று ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரீ-81 துப்பாகி | — | 01 |
| ★ 40 மி.மீ. கைத்துப்பாக்கி | — | 01 |
| ★ ஏ. கே. மகஸீன்கள் | — | 05 |
| ★ ரீ-81 மகஸீன்கள் | — | 04 |
| ★ 40 மி. மீ. ஷெல் | — | 03 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 1,157 |
| ★ கிரனேட் | — | 01 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி. ஹோல்சர் | — | 04 |
| ★ ஏ.கே. ஹோல்சர் | — | 02 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி. ரவைத் தொடர்கள் | — | 50 |
| ★ தலைக் கவசம் | — | 03 |
| ★ இராணுவச் சப்பாத்து | — | 07 சோடி |
| ★ இராணுவப் பை | — | 01 |
| ★ தண்ணீர் கான் | — | 03 |
| ★ அவற்றுக்கான தாங்கியணிகள் | — | 13 |
| ★ சப்பாத்து | — | 05 சோடி |

(ஐ-4)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், டிச. 11

பளை, தம்பகாமம், பேக்கரி வீதியைச் சேர்ந்த மேஜர் பத்மகீர்த்தி (அசோகன்) என்றழைக்கப்படும் பொன்னையா மோகனதாஸ் கடந்த 9 ஆம் திகதி பலாலி ஸ்ரீலங்கா இராணுவ முகாம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவரது திருவுருவப் படம் நாளை திங்கள் காலை 10.00 மணிக்கு பளை சந்தை மைதானத்தில் வைக்கப்பட்டு, இறுதி அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நடப்படும். (இ)



தமிழர் நாட்டார் கலை வடிவங்களில் "ஒயிலாட்டம்" சிறப்பானது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் இந்த நாட்டார் கலைக்குப் புத்துயிர் கொடுக்கும் முயற்சியில், அண்மையில் நடைபெற்ற திரு. மெற்றாஸ்மயிலின் "ஆனையை அடக்கிய அரியாத்தை" நூல் வெளியீட்டு விழாவில் மீண்டும் அறிமுகப்படுத்தியது.

70 வயதான வ. குருசாமியின் நெறியாள்கையில் அரங்கேறிய ஒயிலாட்டத்தில் இரண்டு காட்சிகளை படத்தில் காணலாம். [அ]

## ஜி. சீ. ஈ பரீட்சைமுடிவுகள் இன்றுபலாலிக்கு

யாழ்ப்பாணம், டிச. 11

கடந்த ஒகஸ்ட்டில் நடைபெற்ற ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றிய யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் இன்று மாலை அல்லது நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் புதன் கிழமை

(6ஆம் பக்கம் பார்க்க)

## புதிய எம்.பிக்களுக்கும் 'பஜிரோ' ஜீப் இறக்குமதி!

கொழும்பு, டிச. 11

புதிய எம். பிக்களின் பாவனைக்கென அரசாங்கம் 'பஜிரோ' வாகனங்களை இறக்குமதி செய்ய இருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தெரிவான புதிய எம். பிக்களுக்கு மட்டுமன்றி, எதிரணி எம். பிக்களுக்கும் இந்த வாகனங்கள் சலுகைக் கட்டண அடிப்படையில் வழங்கப்பட இருக்கின்றன.

'பஜிரோ' ஜீப் தேவையான புதிய எம். பிக்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் உட்பட 3 பேர் கிரனேட் வெடித்துப் பலி!

### எகலியகொட பகுதியில் சம்பவம்

கொழும்பு, டிச. 11

வீட்டில் வைத்திருந்த கிரனேட் குண்டு ஒன்று தவறுதலாக விழுந்து வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உட்பட மூன்று பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் எகலியகொட பகுதியில் இந்தச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு விற்க முயன்ற ராணுவச் சிப்பாய் கைது!

கொழும்பு, டிச. 11

களுத்துறை நகரில் உள்ள நகைக் கடை உரிமையாளர் ஒருவருக்குக் கைக்குண்டு ஒன்றை விற்கமுயன்ற சிப்பாய் கைது செய்யப்பட்டார்.

களுத்துறை பொலீஸ் பொறுப்பதிகாரி எப். எஸ். கே. ஜோசப் கடந்த 5ஆம் திகதி பிரஸ்தாப சிப்பாயைக் கைது செய்தார்.

அளுத்துகம பிரதேச வாசியான மேற்படி இராணுவச் சிப்பாய் முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்கு கைக்குண்டை விற்க முயன்ற வேளையிலேயே கைதானார்

இந்தச் சிப்பாய் தந்திரிமலை மல்மது ஓயா இராணுவ முகாமில் கடமையாற்றுபவர் எனப் பொலீஸ் விசாரணையில் தெரியவந்தது. (ஒ)

# 5 பொலீஸ் அதிகாரிகள் செட்டிகுள தாக்குதலில் பலி

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கடந்த வியாழனன்று பிற்பகல் ஒரு மணியளவில் பொலீஸ் அணிகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸ் அதிகாரிகள் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் இதனை லங்கா தீபவுக்குத் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரிகளில் ஒருவர் வவுனியா ஊரணி விசேட பொலீஸ் தாக்குதல் அணியின் கட்டளையிடும் அதிகாரி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இரு பொலீஸார் படுகாயமடைந்தனர். (ஐ-6)

# பாப்பரசரை தரிசிக்க வருவோரை கடும்சோதனைக்கு உட்படுத்த முடிவு

### காலிமுகத்திடலில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 11

அடுத்த மாதம் 20ஆம் திகதி கொழும்பு வரும் பரிசுத்த பாப்பரசருக்கு காலி முகத்திடலில் அளிக்கப்படவிருக்கும் வரவேற்பில் கலந்து கொள்ள வரும் சகலரும் சோதனைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றனர்.

விமான நிலையங்களில் பயணிகள் எவ்வாறு "மெற்றல் டிடெக்டர்" மூலம் சோதனை செய்யப்படுகிறார்களோ அதே மாதிரியான சோதனை இடம்பெறவிருக்கிறது.

பாப்பரசரின் பாதுகாப்பு குறித்து ஆராய கொழும்பில் நடந்த உயர்மட்ட பாதுகாப்பு மாநாட்டில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

குண்டுபோன்ற பொருள்களை எவரும் எடுத்துச் செல்லாத வகையில் இந்தசோதனை நடத்தப்படவுள்ளது. (இ-3)

# விமானப்படைத் தலைமையகம் இடம் மாற்றப்படுவதற்கு எதிர்ப்பு

கொழும்பு, டிச. 11

ஸ்ரீலங்கா விமானப்படை தலைமையகத்தை புதிய இடம் ஒன்றுக்கு மாற்றுவது என்று பாதுகாப்புச் சபை எடுத்துள்ள தீர்மானத்தை விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் சிலர் எதிர்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு கோட்டையில் உள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் உள்ள ஓர் இடத்துக்கு விமானப்படைத் தளத்தை மாற்ற பாதுகாப்பு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். [illegible]

# நரசிம்மராவ் தலைமைக்கு ஆபத்து

புதுடில்லி, டிச. 11

இந்தியாவில் நடந்து முடிந்துள்ள மாநிலத் தேர்தல்களில் ஆளும் காங்கிரஸ் கட்சி சந்தித்துள்ள மிக மோசமான தோல்விகளைத் தொடர்ந்து கட்சியின் தலைவரும், பிரதமருமான நரசிம்மராவுக்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு உருவாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு அவருக்கு நெருக்குதல் கொடுக்கப்பட தேர்தல் முடிவுகள் பெருவாய்ப்பு அளித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாகவே கட்சி தோல்வியைச் சந்திக்க நேர்ந்துள்ளாதக கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் குற்றம் சாட்டியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (இ- ஐ)

## ஆந்திராவில் ராமராவ் முதலமைச்சராகிறார்

புதுடில்லி, டிச. 11

இந்தியாவில் நடைபெற்ற மாநில தேர்தல்களில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது.

தேர்தல் நடந்த ஆந்திரா மாநிலத்தின் புதிய முதலமைச்சராக பிரபல நடிகரும் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான என். டி.ராமராவ் நாளை திங்களன்று பதவியேற்பார்.

ஆந்திரா மாநிலத்தின் மொத்த தொகுதிகளில் தெலுங்கு தேசம் கட்சியும், அதன் கம்யூனிஸ கூட்டணி கட்சிகளும் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையைக் கைப்பற்றும் வலுவான நிலையை அடைந்துவிட்டன.

தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி தாம் பதவி ஏற்ற அரைமணி நேரத்துக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கர்நாடகத்தில் காங்கிரஸ் மூன்றாவது இடத்தில்

புதுடில்லி, டிச. 11

கர்நாடக மாநிலத்தின் புதிய முதலமைச்சராக ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த எம். டி. தேவகவுடா பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடந்து முடிந்துள்ள தேர்தலில் 114 இடங்களை கைப்பற்றி ஜனதா தளம் கட்சி வெற்றியீட்டியுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் இதுவரை ஆளுங் கட்சியாக இருந்து வந்த காங்கிரஸ் கட்சி முக்கிய எதிர்க்கட்சியாகக் கூட வரமுடியாத நிலையில் மூன்றாம் இடத்தையே பெற்றுள்ளது.

40 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ள பாரதிய ஜனதா கட்சி கர்நாடகாவின் முக்கிய எதிர்க்கட்சியாக வந்துள்ளது. (ஐ)

## இந்திய மாநில தேர்தல் முடிவு

புதுடில்லி, டிச. 11

இந்தியாவில் நடந்த மாநிலத் தேர்தல்களின் முடிவுகள் பெரும்பாலும் அறிவிக்கப்பட்டுவிட்டன.

தென்னிந்திய மாநிலமான கர்நாடகாவிலும், சிக்கிமிலும் வாக்குகளை எண்ணும் பணி நேற்றிரவு முடிவடைந்தது. அதன்படி கட்சிகள் வெற்றியீட்டிய தொகுதிகளின் எண்ணிக்கை வருமாறு:-

கர்நாடகம்

மொத்தமாகவுள்ள சட்டசபைத் தொகுதிகள்—224

★ ஜனதா தளம் — 114

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் மீண்டும் வெள்ளம்

# 80, 000 குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், டிச. 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாவது தடவையாக ஏற்பட்டுள்ள பெருவெள் [illegible] பெயர்ந்துள்ளன.

மாமாங்கம், கூழாவெளி, கதிரேசன்கேணி, ஜெயந்திபுரம், காந்தி கிராமம், கல்லடி, எலுமிச்சைமுனை, நாவற்குடா, ஆரையம்பதி, ஏறாவூர், கிரான்குளம், வெல்லாவெளி, வவுணதீவு, பெரியபோறதீவு, ஓட்டுமாவடி, வாழைச்சேனை, வாகரை, கொக்கட்டிச்சோலை, மண்முனைமேற்கு ஆகிய பகுதிகள் வெள்ளத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8. 30 மணியுடன் முடிவடைந்த 24

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்குத் தேவையான

★ அப்பியாசக் கொப்பிகள்

★ பாடசாலை உபகரணங்கள்

அலுவலகங்களுக்குத் தேவையான

★ காகிதாதிகள்

★ இதர உபகரணங்கள்

பதிப்பகங்களுக்குத் தேவையான

காகித வகைகள்

★ அச்சு மைகள்

கட்டட வேலைகளுக்குத் தேவையான

★ கட்டடப் பொருள்கள்

★ பெயின்ட் வகைகள்

ஒரே இடத்தில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

**புஷ்பா அன் கோ**

293, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9875)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 11 — 1920

மறைவு: 11 — 12 — 1993

**அம்புறோஸ் பெனடிக்ற் பேரின்பநாயகம்**
[இளைப்பாறிய ஆசிரியர் - யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி]

அன்புக் கணவனாய்; பாசமிகு தந்தையாய்; சமூகத் தொண்டனாய்; தேனூறு தாய் மொழியாம் தமிழ் மொழியில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரிதனில் சிரேட்ட ஆசானாய்; முப்பத்திமூன்று ஆண்டு காலம் நற்பணி ஆற்றினீர்கள். குருக்களாய், மேதைகளாய், பண்டிதராய், விற்பன்னராய், பலரின் வாழ்க்கையை வித்திட்ட பெருமையைப் பெற்றீர்கள், பிள்ளைகள் பன்னிருவர் அன்னையொடு கலங்கி நிறக அமரரானீரோ! அப்பா! நீங்கள் பேரின்ப வாழ்வு பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக நாளை (12 - 12 - 94) திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியில் பங்குபற்றும் படி அன்புடன் வேண்டுகிறோம்.

ஆறாத்துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(சி/9805)

# இடர்கண்டு தளராத தமிழர்களின் வல்லமைக்கு

# யாழ். ஆஸ்பத்திரியும் டாக்டர்களும் உதாரணம்

**அவுஸ்திரேலிய. சிட்னி பல்கலைக்கழக உடலியந்துறை பேராசிரியர் எஸ். கே. மகேஸ்வரன், அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டுப் பரீட்சைகளை நடத்துவதற்கும், சில சிறப்பு விரிவுரைகளை வழங்குவதற்காகவும் வந்திருந்த வேளை, உதயனுக்கு சிறப்புப் பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார்.**

**நாடறிந்த சத்திரசிகிச்சை நிபுணரும், கலைத்திட்ட புத்தாக்க சிறப்பாய்வாளருமான பேராசிரியர் எஸ். கே. மகேஸ்வரன், கர்நாடக இசைக்கலைஞர், ஆய்வாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் அறுபது எழுபதுகளில் யாழ். வைத்தியசாலையில் மூத்த சத்திரசிகிச்சை நிபுணராகப் பணிபுரிந்தார்.**

**அவரது அவதானிப்புகளில் எங்கள் மருத்துவ கல்வி, வைத்தியசாலை நிலைமை வெளிநாடுகளில் எமது பண்பாட்டின் நிலை பற்றிய தரிசனமாக இந்தப் பேட்டி அமைகின்றது.**

*20 ஆண்டுகளுக்கு முன், நீங்கள் கடமையாற்றிய யாழ்ப்பாண வைத்திய சாலையின் இன்றைய நிலை பற்றிய உங்கள் அவதானிப்பு என்ன?*

அது 1965 — 75 காலப் பகுதி; அனைத்து துறைகளிலும் நிறைய வைத்தியர்களைக் கொண்டு இயங்கிய காலம்; யாழ். வைத்திய சாலையின் பொற்காலமாக இதனை நாம் வர்ணிப்பது உண்டு.

ஆனால் இன்று மிகக்

## வெளிநாடுகளில் தமிழ்ப்பண்பாடு பேணும் ஆர்வ அலைக்கு போதிய அடித்தளமில்லை

குறைந்த எண்ணிக்கையான வைத்தியர்கள், வசதிகளுடன் இங்கு வழங்கப்படும் வைத்திய சேவையின் தரம் கண்டு உண்மையில் வியப்பும், நிறைவும் அடைகின்றேன்.

மிகப் பெரிய அளவில் அதிகரிக்கும் நோயாளர் அழுத்தங்களிடையே, பெரும் வசதியீனங்களின் மத்தியிலும் இங்குள்ள சிறப்புத்துவ நிபுணர்களும், இளம் வைத்தியர்களும் மிகச் சிறப்பாக செயற்பட, அவர்களது அர்ப்பணிப்புடனான கடமை உணர்வும் ஆர்வத்துடன் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும் மனப்பாங்கும் அடிப்படைகள் என்றே சொல்வேன்.

குறிப்பாக இங்குள்ள இளைய தலைமுறையினர் ஏனைய இடங்களில் 10—15 வருடங்களில் கற்றுக்கொள்ளப்படும் நுட்பங்களை 4—5 வருடங்களுக்குள் கிரகித்து மூத்த வைத்திய நிபுணர்களது பணியில் கைகொடுக்கும் நிலைமை பாராட்டுக்குரியது.

எந்த ஓர் இடரிலும் தளராது தம் அறிவு அனுபவத் திறனால் வாழும் தமிழ் இனத்தின் வல்லமையை இவர்களிடம் கண்டு பெருமை கொள்கின்றேன்.

இன்னும் இங்குள்ள தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் பலரும் தமது பாரிய வைத்திய சாலை கடமைகளுடன் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரைகளிலும் துணையாகின்றார்கள். இன்றைய காலகட்டத்தில் இவர்கள் உதவி மிகப் பெறுமதியானது.

*மருத்துவ மாணவர்களுக்கான பரீட்சகராக வந்த நீங்கள் மருத்துவ பீடத்துடனும் ஆர்வமாக தொடர்புகொண்டு சில சிறப்பு விரிவுரைகளையும் மாணவர்களுக்கு எடுத்ததாக அறிகின்றோம். பல்கலைக்கழகத்துடனான உங்கள் அனுபவங்களின் வழி அதன் செயற்பாடுகள் தொடர்பான அவதானம் என்ன?*

**ஆசிரியர் நிலை**

இங்கும் மிகக் குறைந்தளவு ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பல்கலைக்கழகத்தை இயங்க வைப்பதில் அயராது உழைக்கக் காண்கின்றேன். பீடாதிபதியிலிருந்து ஏனைய பேராசிரியர்கள், இளைய விரிவுரையாளர்கள் எல்லோருமே சைக்கிளில் வந்துபோகிறார்கள். சூழலுக்கு இசைந்து கடமையில் கருத்தாக இருக்கிறார்கள்.

இருந்தாலும் இங்குள்ள ஆசிரியர்களுக்கான தேவையைக் கருத்தில் கொண்டு, வெளியேயுள்ளவர்கள் நிலைமை சீர்ப்படும்வரை அதிதி விரிவுரையாளராக வேனும் வந்து உதவவேண்டும் என்பது எனது கருத்து.

**மாணவர்**

மாணவர்களைப் பொறுத்த வரையிலும் அவர்களது பேரார்வமும், விடாப்பிடியான கல்வியிலான ஊக்கமும் சிறப்பான கவனம் பெறுகிறது. மண்எண்ணெய் விளக்கு, இடம்பெயர் அவலங்கள், வசதியின்மைகளிடையே இந்த நாட்டின் ஏனைய வைத்திய கல்லூரி மாணவர்களிலிருந்து எந்த வகையிலும் குறையாதவர்களாக தரமும் செயற்பாடும் கொண்டவர்களாக விளங்கும் அவர்களது வல்லமையை வியக்கின்றேன்.

**நூலகம்**

பல்கலைககழக நூலகத்தைப் பொறுத்தவரை, புதிய பதிப்புகள், புதிய மருத்துவ நூல்கள், சஞ்சிகைகளின் தேவையை அவதானிக்கின்றேன்.

இந்த விடயத்தில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்கள் சிட்னி ப கலைக்கழக தமிழ் மாணவர்களுடன் தொடர்பு கொண்டதன் விளைவாக 'யுனி(f)ண்ட்' (Uni Fund) என்ற பெயரில் ஒரு நிதியத்தை ஆரம்பித்து இந்நூல் சார் தேவைகளில் ஓரளவுக்கு உதவி வருகின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமன்றி தமிழ் பிரதேசத்தில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் உதவ முடிந்திருக்கிறது.

இங்குவந்து நேரடியாக நிலைமைகளை, தேவைகளை அவதானித்துக் கொள்ள முடிந்தமையால் இந்த செயற்திட்டத்தை மேலும் தீவிரப் படுத்த முடியும் என நம்புகின்றேன்.

**கலைத்திட்டம்**

உலகின் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் நிகழும் புதிய மாற்றங்களின் திசையில் நடைமுறையிலுள்ள கலைத்திட்டங்களை மாற்றுதல் தொடர்பான ஆர்வத்தினையும், இங்கு ஆசிரியர்களுடனான சந்திப்பில் அறிய முடிந்தது.

சத்திரசிகிச்சை, உடலியல் என்ற ஆர்வங்களுக்கு மேலாக கலைத்திட்ட உருவாக்கம் எனது சிறப்பார்வத்துறையாக உள்ளதால், இங்குள்ள கலைத்திட்ட மாற்றத்திற்கான செயற்பாட்டில் என்னாலியன்ற உதவியை வழங்கத்தயாராக இருக்கின்றேன்.

*வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே தமிழர் பண்பாடு, தமிழ் உணர்வு எப்படியிருக்கிறது?*

தமிழப் பாரம்பரியத்தை, பண்பாட்டினை பேண வேண்டும் வளர்க்க வேண்டும் என்ற பேரார்வ அலையினை இப்பொழுதுகாண முடிந்தாலும், இதனை ஒரு அடித்தளமில்லாத செயற்பாடாகவேகாண்கின்றேன்.

இந்த ஆர்வம் அர்ப்பணிப்புடன் அமையும் போதே, வருங்கால சந்ததிக்கு இவை கையளிக்கப்படும்; அவர்களிடம் பண்பாட்டு ஊற்றுக்கள் சங்கமிக்கும்.

அங்குள்ளவர்களின் வாழ்க்கை முதன்மைகள், பொருளாதாரத்தில் தான் முழுமையாகக் குவிந்துள்ளது. அங்குள்ளவர்களின், கல்வி ஆர்வம் என்பதும் வெறுமனே தொழில்சார் மேலோட்டத் தேர்ச்சிகள் தொடர்பானவையே.

கல்வியை அதன் முழுமை நோக்கில், காணும் நிலையே இல்லை என்பேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக எந்த ஒரு சமுதாயமும், தன் தாய்மொழியை பேணுவதன் மூலமே, அம் மொழிசார் பண்பாட்டினையும் உணர்வுடன் பிழைக்க வைக்க முடியும். துர்ரதிஷ்டவசமாக இந்த ஆர்வம் மிகமிக குறைவாகவே உள்ளது.

சிட்னி, ரொரண்டோ போன்ற நகரங்களில் சில இடங்களில் தமிழ்ப் பாடசாலைகள், கலைக்கூடங்கள் அமைத்து நிலையை மேம்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. எனினும் இவை மேலும் ஆழமாக திட்டமிட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுத்தப் படவேண்டும்.

கர்நாடக சங்கீத பாடலையும், பரதநாட்டிய குறியீடுகளையும் ஆங்கிலத்திலேயே எழுதிப் படிக்கும் அவலம்;

**பேட்டி: சகன்**

வீட்டிலே தமிழைப்பேசும் ஆர்வத்தை காணமுடியவில்லை, இந்த விடயங்களில் ஆழமான கவனமில்லாத வரை, இந்த முயற்சியெல்லாம் அர்த்தமற்று போய்விடலாம் என அஞ்சுகின்றேன்.

*முழுநேர மருத்துவ பேராசிரியர் பணிகளிடையே, உங்களுக்குப் பிரியமான இசைத்துறை— கலைத்துறை ஆர்வங்களைத் தொடர முடிகிறதா?*

சிட்னி பல்கலைக்கழக இசைப்பீடத்தில், அதிதி விரிவுரையாளராக ஒப்பியல் நோக்கில் இந்திய இசைவரலாறு பற்றிய விரிவுரைகளை வழங்கிவருகின்றேன் கூடவே, அவ்வப் போது சிட்னியிலும், அதிதி விரிவுரைகளுக்காக கனடா செல்லும் வேளை ரொறொண்டோவிலும், சில கர்நாடக இசைக்கச்சேரிகளை நடத்த முடிந்திருக்கிறது.

தமிழியல் சார் கருத்தரங்குகள் சிலவற்றிலும் கலந்து கொள்வதுண்டு. அண்மையில் பாரதி விழா வேளை — இசையியல் நோக்கில் பாரதி என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை படித்தேன்.

*நீங்கள் குறித்தவாறு நேரம் தான் பிரச்சினையாக இருக்கிறது.*

இருந்தும் கிடைக்கின்ற நேரத்தில், தமிழிசையின் வரலாற்றை எழுதும் என் நீண்ட நாள் முயற்சியையும் தொடர்கின்றேன்.

இந்தவகையில், தமிழிசை வரலாறு என்றொரு நூலையும், அதற்கான அடிப்படை விழிப்புணர்வை எமக்குத் தந்த சுவாமி விபுலானந்தரின் யாழ். நூலை அனைவரும் படிக்கும் விதமாக எளிமைப் படுத்தும் ஒரு நூலையும் தருவது எனது எதிர்கால இலக்காக இருக்கின்றது.

அத்தோடு புதிய தேவைகளுக்கு ஏற்ப, அர்த்தமுள்ள வகையில் ஓர் உடலியல் பாட நூலையும் திட்டமிடுகின்றேன்.

இன்றைய பணிகளின் அழுத்தம் குறைய, இந்நூல்களுக்காக அதிக நேரத்தைச் செலவிட முடியும் என நம்புகின்றேன்.

*மீணடும் இங்கு வந்து இங்குள்ள வைத்திய கல்லூரி பணிகளில் உதவுவீர்களா?*

நிச்சயமாக. இங்கு வந்து யதார்த்த நிலைமைகளை உணர்ந்த நிலையில், என்னால் முடிந்தவாறு, அடிக்கடி இப்படியாக வந்து உதவ வேண்டும் என்ற உறுதியுடனேயே செல்கின்றேன்— எனக்கு மட்டுமன்றி வெளியேயுள்ள ஏனைய கல்வியாளர்களுக்கும், இவ்வாறு வருதற்கான தூண்டுதல்களைக் கொடுப்பதற்குஇந்தப்பயணம் வழிசெய்யுமென நம்புகின்றேன். ★

## புலிகளின் குரல் வானொலியில்

**11 — 12 — 1994**

**ஞாயிறு இரவு**

- ★ 8-01 — இசையரங்கம் எஸ். பாலசிங்கத்தின் ஹார்மோனிய வாத்தியக் கச்சேரி
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம்— பொன். கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கைமண்'' 50 ஆம் அங்கம்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**12 —12 — 1994**

**திங்கள் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15— நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7 -35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 8-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## யாழ். மாவட்ட மெய்வன்மைத்துறை ஓர் ஆய்வு

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் துறையின் அபிவிருத்திக்காக — யாழ். மாவட்ட மெய்வல்லுநர்களின் கடந்தகால பெறுபேறுகள், அவற்றின் விருத்தி — வீழ்ச்சி, சாதனைகள் ஆகியவை பற்றிய — விரிவான ஆய்வு ஒன்றை யாழ்பபாணத்தைச் சேர்ந்தவரும், ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியவரும், உயரம் பாய்தலில் ஆசிய சாதனையை நிலைநாட்டியவருமான **கலாநிதி என். எதிர்வீரசிங்கம்** அவர்கள் மேற்கொள்ள விருக்கிறார்.

இது தொடர்பாக பின்வரும் ஆவணங்கள் அவருக்கு வேண்டப்படுவதால், அவற்றை வைத்திருப்போர் எமக்கு அவற்றை அனுப்பி வைத்தால் உரிய பகுதிகளை ''போட்டோஸ்ரற்'' பிரதி எடுத்துக் கொண்டு, மூல ஆவணங்களை உடன் திருப்பி அனுப்பி வைப்போம் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1. தாங்கள் அல்லது தங்களது உறவினர்கள் அல்லது நண்பர்கள் முன்னர் மெய்வன்மைத்துறையில் யாழ். மாவட்ட சாதனைகளை நிலைநாட்டியிருந்தால் அல்லது ஸ்ரீலங்கா மட்டத்தில் இடம் எடுத்திருந்தால் அது தொடர்பான சான்றிதழ்கள்.
2. யாழ். மாவட்ட மெய்வன்மைத்துறை பெறுபேறுகள் தொடர்பான பதிவுப் புத்தகங்கள், ஆவணங்கள், பிரசுரமான கட்டுரைகள், மெய்வன்மைப் போட்டி தொடர்பான வெளியீடுகள்.
3. மெய்வன்மை தொடர்பான சங்கங்களில் நிர்வாக உத்தியோகத்தர்களாக இருந்தோரின் பதிவு அறிக்கைகள், ஆவணங்கள், புத்தகங்கள்.

மேற்படி விவரங்களை வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொண்டு உதவும்படி வேண்டுகிறோம்.

**செயலாளர்,**
யாழ். மாவட்ட அமெச்சூர்
மெய்வல்லுநர் சங்கம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9794)

## ஓராண்டு நினைவு அலை





அமரர்
**செல்வவிநாயகம் விசாகசுந்தரம்**

அன்னைமடியில்: 08—10 1917
இறை அடியில்: 22—11—1993

திருமதி
**வரதலட்சுமி அருளானந்தம்**

அன்னைமடியில்: 10—08—1957
இறை அடியில்: 22—10—1993

திதி: 11 - 12 - 1994

ஓர் ஆண்டு சென்றினும் - என்றும்
எம் உள்ளத்தில் ஒளியாய்
எம் எண்ணங்களில் கருவாய்
எம் செயலில் முன் மாதிரியாக நின்று ஆற்றல்படுத்துவீர்!

- குடும்பத்தினர்.

கந்தஉடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

38 ஏ, பிரப்பம்குளம் வீதி.
யாழ்ப்பாணம்.

(34112)


## மணமகள் தேவை

யாழ். இந்து, 32 வயது, செவ்வாய்க் குற்றமற்ற, உத்தராடம் 1ஆம் பாதம் -அழகான தேகாரோக்கியமுள்ள A/L விஞ்ஞானம் படித்து ஜேர்மனியில் 13 வருடங்களாக தொழிற்சாலை ஒன்றில் Electro Welding Technician ஆக பணி புரிபவருக்கு அழகிய A/L படித்த 25-30 வயதுக்கு இடைப்பட்ட பெண் தேவை. எதிர்வரும் சித்திரை மாதத்தில் விவாகத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியும். பெண்ணின் குறிப்புடன் சகல விவரங்களும் அறியத்தரவும். பெண் ஜேர்மனிக்கு செல்வதற்கு விருப்பமுடையவராய் இருத்தல் வேண்டும்.

தொடர்பு:
இல: 73/ மே/பா உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(34132)


## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சி. சடாட்சர சண்முகதாஸ்**
[B. A., S. L. A. S.]

[பிரதி செயலாளர், உள்துறை அமைச்சு,
மேலதிக செயலாளர், கல்வி கலாசார அமைச்சு,
வட - கிழக்கு மாகாணம்]

அன்னாரது திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். சிறந்த நற்பண்புள்ள, கடமையுணர்வுள்ள ஓர் அரச சேவையாளரை இழந்துள்ளோம். அவரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திப்போமாக.

பிரதேச செயலர்,
பணியாளர்கள், ஊழியர்,
கிராம சேவையாளர்கள்.

[illegible]
சங்கானை

(34137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொஸாம்பிக்கில் ஆட்சியாளருக்கு எதிரான யுத்தத்தை 'ரெனாமோ' இயக்கம் மீண்டும் ஆரம்பிக்குமா?

சமீபத்தில் அறிவிக்கப்பட்ட மொஸாம்பிக் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் படி, 1975ஆம் ஆண்டு முதல் மொஸாம்பிக்கில் ஆட்சியில் இருந்து வரும் பிறிலிமோ (Frelimo) கட்சியின் தலைவரும் மொஸாம்பிக் ஜனாதிபதியுமான ஜோக்கிம் சிசானோவா (JouimChissanoa) வெற்றி பெற்றுள்ளார்.

மொஸாம்பிக்கில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக 1975முதல் ஆயுதப் போராட்டம் நடத்திவந்த ரெனாமோ (Renamo) இயக்கத்தின் தலைவர் அபோன்சோ டலக்காமால் (Afonso Dhlakama) தேர்தலில் தோல்வி அடைந்து விட்டார்.

**போர்த்துக்கலின் குடியேற்ற நாடு**

1975ஆம் ஆண்டு போர்த்துக்கலிடம் இருந்துமொஸாம்பிக் சுதந்திரம் அடைந்தது.

போர்த்துக்கீசரின் ஆட்சிக்கு எதிராக மொஸாம்பிக்கில் ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த பிறிலிமோ இயக்கமும் (Frelimo-MozambiqueLibrationFront) ரெனாமோ இயக்கமும் Renamo- Mogambique National Respstance) போர்த்துக்கீசர் நாட்டை விட்டு வெளியேறியதும் மொஸாம்பிக்கில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு போராட்டம் நடத்தின.

இந்தப் போராட்டத்தில் மார்க்ஸிச சார்பு பிறிலிமோ இயக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

கியூபாவின் காஸ்ட்ரோ அரசாங்கம் ஆயுதம் மற்றும் படை உதவிகளை வழங்கி பிறிலிமோ மார்க்ஸிச அரசு கவிழ்க்கப்படாது பார்த்துக் கொண்டது.

**1992இல் ஒப்பந்தம்**

1992 ஒக்ரோபர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையின் கீழ் மொஸாம்பிக் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதுவரையிலான 16 வருட காலத்தில் (1975–1992) மொஸாம்பிக் அரச படைகளுக்கும் தென் ஆபிரிக்க சார்பு வலதுசாரி ரெனாமோ இயக்கத்துக்கும் இடையில் நடைபெற்ற சிவில் யுத்தத்தில் 5லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த சிவில்யுத்தம் காரணமாக அங்கோலாவைப் போன்று மொஸாம்பிக்கிலும் பொருளாதாரம் மிகவும் மோசமான அளவு பின்தள்ளப்பட்டு விட்டது.

1992 ஒக்ரோபர் சமாதான ஒப்பந்தத்தில் மொஸாம்பிக் அரசாங்கத்தின் சார்பில் பிறிலிமோ கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ஜோக்கிம் சிசனோவா கையெழுத்திட்டார். ரெனாமோ இயக்கம் சார்பில் அதன் தலைவர் அபோன்சோ டாக்காமா கையெழுத்திட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இரு தரப்பும் படைகளைக் குறைக்கவும் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தவும், தேர்தலை நடத்தவும் இணக்கம் காணப்பட்டது.

இதன் பிரகாரமே கடந்த ஒக்ரோபர் 27–29ஆம் திகதிகளில் அங்கு தேர்தல் நடைபெற்று ரெனாமோ இயக்கம் தோல்வி அடைந்தது.

மொஸாம்பிக்கின் சனத்தொகை 1கோடியே 60 லட்சம்.

இதில் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 54 லட்சம்.

ஒக்ரோபர் தேர்தலில் பிறிலிமோ கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் 53.3 சதவீதம். ரெனாமோ இயக்கத்துக்குக் கிடைத்த வாக்குகள் 33.73 சதவீதம்.

**முதல் நாள் வாக்களிப்பு பகிஷ்கரிப்பு**

ஒக்ரோபர் 27ஆம் திகதி வாக்களிப்பு ஆரம்பமான முதல் நாள் தேர்தல் முறைகேடாக நடப்பதாக றெனாமோ இயக்கத் தலைவர் அபோன்சோடாக்காமா குற்றஞ்சாட்டினார். முதல் நாள் வாக்களிப்பையும் பகிஷ்கரித்தார்.

இதனால் மற்றொரு அங்கோலாவாக மொஸாம்பிக் மாறுமோ என்று அச்சம் ஏற்பட்டது.

பகிஷ்கரிப்பைக் கைவிடும்படி ஐ. நாவும் மற்றும் அண்டை நாடுகளும் நெருக்குதல் கொடுத்தன.

இதன் காரணமாக அபோன்சோ டாக்காமா தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டார்

தற்போது,ஒக்ரோபர் தேர்தல் முடிவை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சியில் இருந்து தமது பங்களிப்பை நாட்டு மக்களுக்குச்

## தேர்தல் தோல்வியை ஏற்றது; எனினும் குளறுபடி எனக் குற்றச்சாட்டு

செய்யப் போவதாகவும் றெனாமோ இயக்கத் தலைவர் கூறுகிறார்.

ஆனால் ஒக்ரோபர் தேர்தல் நியாயமான முறையில் நடைபெறவில்லை என்பதே றெனாமோ இயக்கத்தின் நிலைப்பாடு.

**அங்கோலாவின் பாதையில் மொஸாம்பிக்?**

1991இல் அங்கோலாவில் யுனிட்டா இயக்கத்துக்கும் பதவியில் உள்ள மார்க்ஸிய சார்பு யோஸ் எட்வார் டோடொஸ் சாண்ரொஸ் அரசுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகி 1992 செப்ரெம்பரில் தேர்தலும் நடைபெற்றது.

ஆனால் தேர்தலில் யுனிட்டா இயக்கம் தோல்வி அடைந்தவுடன் தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என்று கூறிக்கொண்டு மீண்டும் ஆயுதங்களைத் தூக்கியது.

தற்போது கடந்த மாதம் 20ஆம் திகதி யுனிட்டாவுக்கும் சாண்ரொஸ் அரசுக்கும் இடையில் மற்றொரு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது.

யுனிட்டா தலைவர் ஜோனஸ் சவிம்பி இல்லாமலேயே லுஸாக்காவில் அங்கோலா சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது.

பாதுகாப்பைக் காரணம் காட்டி லுஸாக்கா செல்ல மறுத்து விட்டார் சவிம்பி. மீண்டும் ஒப்பந்தத்தில் யுனிட்டா கைச்சாத்திட்ட போதிலும் அதிகாரத்தைக் கைப்பற்றும் தனது குறிக்கோளை அடைவதற்கு ஒப்பந்தம் தடையாக இருக்குமானால் யுனிட்டா இயக்கம் மற்றும் ஒரு தரம் ஒப்பந்தத்தைக் குழப்பலாம் என்பதே அரசியல் அவதானிகளின் ஊகம்,

யுனிட்டா தலைவர் சவிம்பியின் வழியை, மொஸாம்பிக்கில் றெனாமோ இயக்கத் தலைவர் அபோன்சோ டாக்காமா பின் பற்றுவரானால் மொஸாம்பிக் மற்றொரு அங்கோலாவாக மாறும் ஆபத்து இருந்து வருகிறது.

**17 லட்சம் மக்கள் இடம் பெயர்ந்தனர்**

16 வருடகால சிவில் யுத்தத்தின் போது மொஸாம்பிக்கில் இருந்து 17 லட்சம் மக்கள் வரை வெளியேறி இருந்தனர்.

அண்டை நாடுகளான மலாவி, சாம்பியா, சுவாஸிலாந்து, தென் ஆபிரிக்கா, தன்ஸானியா ஆகிய நாடுகளுக்கு இவர்கள் இடம் பெயர்ந்திருந்தனர்.

**யு. என். எச். சி. ஆர் முன் உள்ள பணி**

மொஸாம்பிக்கில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி தேர்தல் நடந்து முடிந்ததை அடுத்து அகதிகளாக வெளிநாடு சென்றவர்கள் தற்போது மீண்டும் சொந்த நாட்டுக்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானுக்கு அடுத்ததாக பெரும் தொகையான பணத்தை இந்த மீளக் குடியேற்றத்துக்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் (UNHCR) செலவிட வேண்டிய நிலையில் இருந்து வருகிறது.

அதுமட்டுமல்ல இந்த சிவில் யுத்தத்தின் போது புதைக்கப்பட்ட இரண்டு லட்சம் நிலக் கண்ணிகளைக் கண்டு பிடித்து செயல் இழக்க வைக்கும் பெரும் பொறுப்பும் சுமத்தப்பட்டுள்ளது.

அகதிகளை மீளக் குடியேற்றுவதற்கு 20 கோடி 34 லட்சம் டொலரை யு. என். எச். சி. ஆர் ஒதுக்கி இருக்கிறது.

**ரெனாமோ தோல்வி அடைய காரணம் என்ன?**

கடந்த காலங்களில் ரெனாமோ இயக்கம் மொஸாம்பிக்கில் நடத்திய படுகொலைகளே அது மக்கள் மத்தியில் செல்வாக்கு இழக்கக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களைக் கட்டாயமாகப் படையில் சேர்த்தல் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அந்த இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளன.

**கெமர்ரூஜின் பாதையில்**

1993ஆம் ஆண்டு கம்போடியாவில் நடைபெற்ற தேர்தலில் பங்குபற்ற கெமர்ரூஜ் இயக்கம் கடைசி நேரத்தில் பின் வாங்கியதுக்கும் இப்படியான சம்பவங்களே காரணம்.

1991ஆம் ஆண்டு கம்போடிய சமாதான ஒப்பந்தத்தில், கெமர்ரூஜ் கையெழுத்திட்டிருந்தது

1993 தேர்தலில் பங்குபற்றாத கெமர்ரூஜ் இயக்கம் தற்போது மீண்டும் ஆயுதங்களைத் தூக்கி உள்ளது.

பதவியில் உள்ள அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகிறது.

1975—78 காலப்பகுதியில் கம்போடியாவில் கெமர்ரூஜ் ஆட்சியின் போது சுமார் 10 லட்சம் மக்கள் வரை கொலை செய்யப்பட்டனர். கெமர்ரூஜ் இயக்கத்தினால் 1993 தேர்தலில் நிற்க முடியாது போனதுக்கு இதுவே பிரதான காரணம்.

**மோசமான முறையில் பொருளாதாரம் விழ்ச்சி**

சிவில் யுத்தம், தோல்வி அடைந்த சோஷலிச ஆட்சி முறை, வரட்சி ஆகியவை மொஸாம்பிக்கை உலகில் உள்ள வறிய நாடுகளில் ஒன்றாக மாற்றி விட்டது.

1975ஆம் ஆண்டு முதல் மொஸாம்பிக்கில் ஆட்சி செய்து வந்த பிறிலிமோ கட்சி, மொஸாம்பிக் வரலாற்றில் முதல் தடவையாக பல கட்சிகள் கலந்து கொண்டு தேர்தலில் பங்குபற்றி வெற்றி அடைந்த போதிலும் மொஸாம்பிக்கின் எதிர்காலம் இன்னமும் கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது.

யுத்தம் முடிவடைந்ததை அடுத்து லட்சக் கணக்கான மக்கள் மொஸாம்பிக் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு சமூக வசதிகளைச் செய்து கொடுக்கும் பெரிய பொறுப்பு புதிய அரசின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

மொஸாம்பிக் புதிய அரசாங்கத்தின் மந்திரிசபை இம்மாதம் நடுப்பகுதியில் அமைக்கப்பட உள்ளது. அதில் ரெனாமோ இயக்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படாவிடில் புதிதாக அரசியல் நெருக்கடிகள் உருவாகலாம்.

**மொஸாம்பிக்கின் வரலாறு**

1498ஆம் ஆண்டு வஸ்கொடகாமா (Vascode Gama) மொஸாம்பிக் தீவில் இறங்கினார். 1507ஆம் ஆண்டு போர்த்துக்கல் முதல் தடவையாக மொஸாம்பிக்கில் காலூன்றியது. 1629ஆம் ஆண்டு போர்த்துக்கலின் முழுக் கட்டுப்பாட்டில் மொஸாம்பிக் வந்தது.

1951இல் போர்த்துக்கலின் வெளிநாட்டு மாகாண அந்தஸ்து மொஸாம்பிக்குக்கு வழங்கப்பட்டது.

1960ஆம் ஆண்டில் பிறிலிமோ இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு போர்த்துக்கலுக்கு எதிரான தேசியவாதிகளின் சுதந்திரப் போராட்டம் ஆரம்பமானது.

1964 செப்ரெம்பர் 25ஆம் திகதி பிறிலிமோ இயக்கப் படைகளுக்கும் போர்த்துக்கல் படைகளுக்கும் இடையில் மொஸாம்பிக்கில் முதலாவது மோதல் ஏற்பட்டது.

பிறிலிமோவின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத நிலையில் போர்த்துக்கல் அரசு ஒரு கட்டத்தில் 70 ஆயிரம் படையினரை மொஸாம்பிக்கில் குவித்திருந்தது.

மொஸாம்பிக்கைத் தொடர்ந்து வைத்திருக்க பெரும் தொகை பணத்தைச் செலவிட வேண்டிய நிலையும் போர்த்துக்கலுக்கு ஏற்பட்டது.

1970 இல் போர்த்துக்கலில் ராணுவம் கிளர்ச்சி செய்து பதவியில் இருந்த அரசு கவிழ்ந்தது.

1975ஆம் ஆண்டில் மொஸாம்பிக்குக்கு போர்த்துக்கல் சுதந்திரம் வழங்கியது.

1975இல் மொஸாம்பிக் சுதந்திரம் அடைந்த போதிலும் தற்போதுதான் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை மொஸாம்பிக் மக்களுக்குக் கிடைத்துள்ளது.

எனினும் ரெனாமோவின் கையில்தான் மொஸாம்பிக்கின் எதிர்கால ஜனநாயகம் இன்னமும் தங்கி இருக்கிறது ★

**-சஞ்சாரன் -**

# அரசமைப்பை தூக்கி வீசும் ஜனாதிபதியை கட்டுப்படுத்த முடியாத ஓர் அரசமைப்பு!

தற்போதைய அரசமைப்பு விதிகளுக்கு உட்பட்டு அதனை மாற்றி, புதிய அரசமைப்பைக் கொண்டு வரமுடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா —

விரும்பினால் இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்துவதன் மூலம் அல்லது வேறு வழிகளில் தற்போதைய அரசமைப்பைத் தூக்கி வீசுவதன் மூலம் புதிய அரசமைப்பைக் கொண்டு வரமுடியும் என்பதை இக்கட்டுரைத் தொடரின் கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம்.

ஓர் அரசமைப்புக்கு விசுவாசமாக, அதனைப் பேணி, போற்றிப் பாதுகாப்பேன் என சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற ஒரு ஜனாதிபதி, அதனை மீறி அதனைத் தூக்கி வீசும் போது அந்த ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தி, தண்டிக்க அல்லது அவரது நடவடிக்கையைத் தடுக்க நடைமுறையில் போதிய சட்ட அதிகாரமற்றதாக அந்த அரசமைப்பு இருப்பதை இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

**ஜே. ஆர். கொண்டு வந்த அரசமைப்பு**

தற்போதைய அரசமைப்பை 1978இல் அப்போது ஆட்சியிலிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கொண்டு வந்தது.

குடியரசு ஆட்சி முறையில் ஒரு முடியாட்சி மன்னனைப் போலதான் அரசதிகாரம் செய்வதற்கு வசதியான ஓர் அரசமைப்பை ஜே. ஆர். கொண்டு வந்தார்.

1977 இல் தொகுதி ரீதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வரும் அளவுக்கு அவரது கட்சிக்குக் கிடைத்த மகத்தான வெற்றி, ஆட்சி அதிகாரத்தை ஓரிடத்தில் (தன்னிடம்) குவிக்கும் இந்த அரசமைப்பை உருவாக்குவதற்கு அவருக்கு உதவியது.

**ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத்தொடர முடியாது**

இந்த அரசமைப்பின் 35 ஆவது உறுப்புரைப்படி —

ஜனாதிபதி பதவியில் இருக்கும் ஒருவருக்கு எதிராக —

அவரது பதவி முறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவர் செய்த அல்லது

## பழையதை ஒதுக்கி புதியதை ஏற்படுத்த சந்திரிகாவுக்குள்ள வாய்ப்பான அம்சம்

செய்யாது விட்ட எந்த விடயத்துக்காகவும் வழக்கு எதுவும் தொடுக்கப்பட முடியாது.

ஆனாலும் — ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள இந்த சிறப்புரிமை மூன்று விடயங்களில் மட்டும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

(i) சம்பந்தப்பட்ட ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் தொடர்பான — ஜனாதிபதித் தேர்தல் வழக்குகள்.

(ii) ஜனாதிபதி தம்வசம் வைத்திருக்கும் ஓர் அமைச்சுத் தொடர்பாக — அந்த அமைச்சர் என்ற முறையில் — அந்த அமைச்சருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படக் கூடிய வழக்குகள்.

(iii) ஜனாதிபதிக்கு எதிராக —

அவர் ஜனாதிபதிப் பதவியை ஆற்ற முடியாத அளவு மனப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் அடைந்திருக்கிறார் என்று தெரிவித்தோ அல்லது குற்ற விசாரணை (Impeachment) நடத்த வேண்டும் என்று கோரியோ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணை நாடாளுமன்றத்தில் உரிய முறையில் நிறைவேற்றப்பட்ட பின்னர் இடம்பெறக் கூடிய உயர்நீதிமன்ற விசாரணை.

இந்த மூன்று விடயங்களைத் தவிர வேறு எந்தக் காரணங்களுக்காகவும் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவோ அல்லது நீதிமன்ற விசாரணை நடைபெறவோ முடியாது.

இந்த சிறப்புரிமை ஜே. ஆரினால் உருவாக்கப்பட்ட அரசமைப்பினால், அவருக்கு என வழங்கப்பட்ட விசேட சலுகையாகும்

இந்தச் சலுகைதான் இப்போது ஜனாதிபதி பதவிக்கு வந்திருக்கும் சந்திரிகாவுக்கும் அரசமைப்பை தூக்கி வீசி நடப்பதற்கு அதிகாரத்தைக் கொடுக்கப் போகின்றது.

**நீதிமன்றங்கள் செயலிழக்கும்**

இராணுவ ஆட்சி மூலமோ அல்லது வேறு அறிவிப்புகள் மூலமோ தற்போதைய அரசமைப்பை ஜனாதிபதி சந்திரிகா செயல் இழக்கச் செய்யும் போது —

அத்தகைய அறிவிப்பு வருவதுடன் தற்போதைய அரசமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களும், நாடாளுமன்றமும் செயல் இழந்து விடும்; புதிதாக நடைமுறைக்கு வ[illegible] சமைப்பின் கீழ்தான் அவை புதிதாக இயங்கத் [illegible]

**அரசமைப்பு விவகாரம் குறித்து ஓர் அலசல்- 3**

வேண்டியிருக்கும்.

ஆனால் ஜனாதிபதியின் அத்தகைய அறிவிப்பு மூலம் அரசமைப்போ அல்லது தங்களது அமைப்போ செயலிழந்து விடவில்லை என்று அதற்குப் பின்னரும் நீதிமன்றங்கள், நாடாளுமன்றம் ஆகியவை கருதி தாங்கள் தொடர்ந்து செயற்படுவதாக அறிவிக்கலாம் என்று நாம் வைத்துக் கொண்டால் கூட —

அல்லது அத்தகைய அரசமைப்புக்கு முரணான அறிவிப்பை விடுப்பதற்கு ஜனாதிபதி ஆயத்தமாகின்றார் என்ற தகவலை ஊகத்தின் அடிப்படையில் அல்லது ஆதாரங்களுடன் முன்கூட்டியே இலங்கைப் பிரஜை ஒருவர் அறிந்து கொண்டால் கூட —

ஜனாதிபதியின் அத்தகைய அரசமைப்பு மீறல் செயற்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, அவரைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையிலேயே மக்கள் உள்ளவர்; நீதிமன்றங்கள் உள்ளன; தற்போதைய நாடாளுமன்றம் உள்ளது.

**நடவடிக்கை எடுக்க ஒரேயொரு வழி**

ஒரு ஜனாதிபதி அரசமைப்பை வேண்டுமென்றே மீறும் போது அவருக்கு எதி[illegible] பதற்கு ஒரே ஒரு வழிதான் [illegible] அரசமைப்பின் 38 ஆம் உறுப்புரையின் இரண்டாவது உபபிரிவு இது பற்றிக் கூறுகிறது.

இதன்படி —

ஜனாதிபதியின் இத்தகைய செயலுக்காக அவருக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்படலாம்.

அத்தகைய பிரேரணைக்கு ஆதரவாக நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவு கிட்டும்போது மட்டுமே — உயர்நீதிமன்ற விசாரணை மற்றும் நீதிமன்றின் சாதகமான சிபாரிசு ஆகியவற்றுக்குப் பின்னர் —

வேண்டுமென்றே அரசமைப்பை மீறிய குற்றத்தை இழைத்ததற்காக ஜனாதிபதியைப் பதவியிலிருந்து விலத்த முடியும்.

ஆனால் அரசமைப்பைத் தூக்கி வீசும் செயலை— அரசமைப்பு மீறலை — சந்திரிகா புரியும் போது— நாடாளுமன்றத்தில் அவரது பொ. ஐ. மு. அரசு ஆட்சியில் இருப்பதால் அவருக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைப் பெறக் கூடிய நிலை கடைசி வரை ஏற்படப்போவதில்லை.

இது தவிர, அரசமைப்பு மீறலில் ஜனாதிபதி ஈடுபடுவதைத் தடுப்பதற்கு தற்போதைய அரசமைப்பில் வேறு வழிகள் ஏதும் இல்லை என்பதால்—

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்காக தற்போதைய அரசமைப்பை ஜனாதிபதி சந்திரிகா தூக்கி வீசும் போது சட்டரீதியான [illegible] அல்லது தடையை அவர் எதிர்நோக்க வேண்டி வராது என்பது திண்ணம்.

ஆனால் சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்ட வழிமுறைகளை நாடாது வேறு வழியில் புதியஅரசமைப்பைஏற்படுத்த சந்திரிகா முயலும் போது—

அதற்கு எதிராக சட்டத்தில் குறித்தொதுக்கப்படாத வேறு வழியில் குறிப்பாக மக்களைத் தூண்டி விடுவதைப் போன்ற நடவடிக்கைகள் மூலம் — சந்திரிகாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ—

அல்லது தவறான முறையில் புதிய அரசமைப்பை ஏற்படுத்த முயலும் சந்திரிகாவின் செயலுக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்திரிகாவுக்கும், அவரது அரசுக்கும் கெட்ட பெயரை வாங்கித்தரும்— அல்லது நம்பகத் தன்மையை இழக்கச் செய்யும் — நடவடிக்கைகளை எடுக்கவோ— சந்திரிகாவுக்கு எதிரான அணிகள் முயலக்கூடும்.

அத்தகைய முயற்சிகளுக்கு வாய்ப்புண்டா என்பதையும், அவற்றை தடுப்பதற்கு தற்போதைய அரசமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வழங்கியுள்ள வாய்ப்பான அதிகாரங்களையும் இத்தொடரின் இறுதி அத்தியாயத்தில் அலசுவோம். ★

**-வித்தி-**


## நூல் அறிமுக விழா

கலாநிதி கா. குகபாலன்
அவர்களின்
தீவகம் - வாழ்வும் வளமும்

வெளியீடு: தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியம்
இடம்: குமாரசாமி மண்டபம் யாழ். இந்துக் கல்லூரி
காலம்: 11 – 12 – 1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணி
தலைமை: பேராசிரியர் செ. பாலச்சந்திரன் (தலைவர், புவியியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியம்.
32/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
அம்பிகை களஞ்சியம்
304 (110), கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.
[சி-9804]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இவ்வாரம் தருவிக்கப்பட்ட புதிய 1995 மாதக்கலண்டர்கள் விற்பனைக்குண்டு. உங்கள் விலாசமிட்டு எம்மிடம் அழகாக மலிவாக பதிப்பித்தும் கொள்ளலாம். மகாலக்சுமி அச்சகம், 127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (8066)

மானிப்பாயில் இரண்டரைப் பரப்பு காணியில் ஐந்து அறைகள் மற்றும் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு, சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நாகேந்திரம், மே/பா மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மானிப்பாய். (34071)

சகல விடுமுறை நாட்களும் (தமிழீழம் உட்பட) அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் ரூபா 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம் பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [33928]

பான்ரில் புறாக்கள் (Fantil) அத்துடன் பாவித்த ஆங்கிலக் கதைப் புத்தகங்கள் மற்றும் மருத்துவபீட மாணவர்களுக்கான புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (34134)

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு முன்பாக 1¾ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. கனகரத்தினம், 547, பருத்தித்துறை வீதி, நல்லூர். (34135)

சித்தன்கேணி சந்தி, கணேச வித்தியாசாலைக்கு அருகில் பிரதான வீதியில் கடைகள் கட்டக்கூடிய எட்டுப் பரப்புக் காணியில், நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராசா, 27, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (34125)

### இசைக்கருவி

நல்ல நிலையிலுள்ள பொங்கோஸ் ஒன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தீசன் ஸ்ரோர்ஸ், 14A, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (34123)

### மலிவு விற்பனை

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்கள் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

### பெண் கட்டர் தேவை

ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு விதம் விதமாக மாதிரி உடைகள் வெட்டிக் கொடுப்பதிலும், மற்றும் உள்ளங்கி (பிறா) வெட்டித் தைப்பதிலும் பயிற்சி உள்ள பெண்கள் தேவை. 31-12-94 முன்பாக விண்ணப்பிக்கவும். இல. 728, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி-9883)

### ரி. வி. டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள், ரி. வி. டெக், எல்லாவிதமான மணிக்கூடுகளையும் பழுதுபார்த்துக் கொள்ளடில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9911)

### இறைச்சிக் கோழி

Broiler இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [34019]

### மணப்பெண் தேவை

இங்கு முகாமையாளர் பதவியிலுள்ள பட்டதாரிக்கு மறுமணத்திற்கு 39 வயதிற்குள் 28-12-94இல் நியூசிலாந்துக்கு அவருடன் செல்லக்கூடிய கல்வியறிவுள்ள மணப்பெண் தேவை. சீதனம், நிறம், வயது குறைந்தோருக்குத் தடையல்ல. தீவகத்தாரும் வேலை நாட்களில் விண்ணப்பிக்கலாம். செல்லப்பா, 103, பிறவுண் வீதி, கொக்குவில். (34129)

### தவறிவிட்டது

ஆண்கள் கைக்கடிகாரம் 8-12-94 அன்று நீதிமன்ற வளவு, பிறவுண் வீதி, ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் தரப்படும். அ. சிதம்பரநாதன், புத்தூர் மேற்கு, புத்தூர். [8071]

### இலகு திருமண சேவை

38 வயது, பரணி செவ்வாய் 2, கொழும்பு Airlanka நிறுவனத்தில் கடமைபுரிபவருக்கு 32 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. புதன் மாலையில் சந்திக்கவும். து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. (34131)

### பாடசாலை உபகரணங்கள்

பாடசாலை உபகரணங்கள், கொப்பி வகைகள், கப் மெழுகுதிரி, வைற்சிப், சூபொலிஸ் (வெள்ளை) பூச்சி கொல்லி, இன்செனிரிடஸ்ட் மலிவாக பெற்றுக்கொள்ள கண்ணன் ஸ்தை, மக்கள் வங்கி முன்பாக, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-9803)

### சேவை

குறைந்தசெலவில் நிறைந்த சேவை. தமிழ், ஆங்கில தட்டச்சும் மற்றும் றோணியோ பிரதிகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: திருமால் அச்சகம், 393, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (34130)

### வீடு தேவை

சுண்டிக்குளி பாடசாலைகள், கச்சேரிக்கு அருகில் அல்லது கச்சேரி நல்லூர் வீதிக்கு சமீபமாக ஒரு தனி வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. தொடர்பு: இல. 732, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (34133)

### பணிப்பெண் தேவை

கந்தர்மடத்தில் வசிக்கும் தேகாரோக்கியம் நன்னிலையில் உள்ள ஒரு வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கு முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ பணியாற்றக் கூடிய ஒரு பெண் உதவியாளர் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ர. சதாசிவம், 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (34136)

### எரு விற்பனைக்கு

கீழ்க்காண் விலாசத்தில் எரு விற்பனைக்குண்டு. வாங்குபவர்கள் அலுவலக நேரத்தில் எருவை பார்வையிட்டு கூறுவிலையை 19-12-94 ஆம் திகதிக்குமுன் சமர்ப்பிக்கவும். தபால் உறையில் இடதுபக்க மேல்மூலையில் எருவிற்கான கூறுவிலை என எழுதவும். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-9806)

---

## நத்தார் புது வருடத்தை முன்னிட்டு
## விசேட மலிவு விற்பனை
**01-12-94 முதல் 31-12-94 வரை**

காலணி வகைகளும் அடப்ப (பாக்) வகைகளும் அதி விசேட கழிவு விலையில் விற்பனையாகின்றன. றப்பர் காலணிகள் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

டி. எஸ். ஐ. பாவனையகம்,
281 சி, இளங்கோ வீதி (மணிக்கூட்டு வீதி),
யாழ்ப்பாணம்.
[8070]

---

## நூல் வெளியீடு

கலாநிதி கா. குகபாலனின் "தீவகம் — வளமும் வாழ்வும்" என்ற நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமையில் வெளியீட்டு விழா இடம்பெறும். (ஒ-17)

## 'மருதம்' சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச செயலாளர் பணிமனையின் இலக்கிய வட்டத்தினர் "மருதம்" என்னும் பெயரில் காலாண்டு கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளனர். (க-30)

---

## உடன் தேவை

எமது சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் சிறு கைத்தொழில் முயற்சிக்கு (அதாவது மெடிக்கல்பை, மருந்துப் போத்தல் லேபிளிங், பஞ்சு லேபிளிங் செய்யும்) பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் நேரிலும், தபால் மூலமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இல. 8, மணிக்கூட்டு வீதி,
(மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக),
யாழ்ப்பாணம்.

சங்க லிகிதராக கடமையாற்ற ஆண்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

செயலாளர்,
வடபிராந்திய யாழ். மருத்துவ-வணிகர் சங்கம்.

[சி-9940]

---

26ஆம் வெற்றி ஆண்டில்........
ஆண்டு 4 முதல் A/L வரை

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

# பொண்ட் கல்வி நிறுவனம்

## A/L

| | சனி - ஞாயிறு | பகல் நேரம் |
|---|---|---|
| CHEMISTRY | — திரு. சிவசோதி | — திரு. குமரன் |
| PHYSICS | — திரு. ஜெயசீலன் | — திரு. பத்மநாதன் |
| BOTANY | — திரு. S. குமார் | — திரு. நேசன் |
| PURE | — திரு. குணம் | — திரு. குணம் |
| ZOOLOGY | — திரு. ஞானேந்திரன் | — திரு. குணா |
| APPLIED | — திரு. குணம் | — திரு. குணம் |

**ஆண்டுகள் 9, 10 O/L - 4, 5, 6, 7, 8**

| | | |
|---|---|---|
| கணிதம் | — ரட்ணவேல், ஜெகஜோதி | – செல்வி பிரான்சிஸ் |
| விஞ்ஞானம் | — ஸ்ரீசந்திரராசா, சங்கர் - வாமன் | – அரவிந்தன் |
| தமிழ் | — திருஞானம் | – செல்வி ஜோண்சன் |
| சமூகக்கல்வி | — ஸ்ராலின் | – S. சுதன் |
| ஆங்கிலம் | — ராஜரட்ணம் | – ராஜரட்ணம் |
| சமயம் | — ஸ்ரீஸ் | – சமயம் சுகாதாரம் (செல்வி ராஜதுரை |
| வர்த்தகம் | — T. வாமதேவா | |

SPOKEN ENGLISH = K. V. தாசன்
இப்பொழுது நடைபெறுகின்றன.

## BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
எமது நிறுவனத்தில் பயிற்சி பெற்று,
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்.
[8069]

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் **நாகலிங்கம் இராமலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
மலர்வு: 12 — 01 — 1912
உதிர்வு: 22 — 11 — 1993
திதி: 11 — 12 — 1994

திருமதி **இராசமணி இராமலிங்கம்**
மலர்வு: 10 — 01 — 1914
உதிர்வு: 22 — 12 — 1992
திதி: 11 — 12 — 1994

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும்
உங்கள் முகங்கள் என்றென்றும் – எங்கள்
உள்ளங்களில் பதிந்திருக்கும் – உங்கள்
நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும் எம் கண்ணீர் பிரார்த்தனைகள்:

சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

நா. அம்பிகைபாகன்,
மடத்தடி [illegible]
கோண்டாவில் [illegible]
(34121)

---

வெளிவந்துவிட்டது!
எங்கும் கிடைக்கும்!!

அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தின்
அற்புதமான வெளியீடுகள்!

பாலர்களுக்குப் படிக்க படிக்க
மனம் நிறைந்த மகிழ்ச்சியைத் தரும்!!

## இனிய பாலர் தமிழ்
(பாலர் வகுப்பு ஆண்டு - 1க்குரியது)
விலை ரூபா 30/-

★ பலவர்ண அழகான சித்திரங்களுடன் உயிர் எழுத்துக்களின் ஓசை மொழிகள்
★ படம் பார்த்து கதை சொல்லல்
★ படம் பார்த்துப் பெயர் சொல்லல்
★ சிறுவர்களுக்கான பாட்டுக்கள்
★ படத்தோடு சேர்த்துப் படித்தல்
மற்றும்
★ பூக்களின் வகைகள், நிறங்கள், பறவைகள், பூச்சிகள், காய்கறிகள், பழங்கள், காட்டு மிருகங்கள், வீட்டு மிருகங்கள் என்பனவற்றின் வகைகள் சித்திரங்களுடன் அமைந்த ஒப்பற்ற நூல்.
(இது பாடநூல் மட்டுமன்றி ஒரு செயல் நூலாகவும் பயன்படுத்தக் கூடியது)

## A B C For Nursery & Year – I
விலை: ரூபா 30/

இனிய பாலர் தமிழ் போன்று ஆங்கில மொழியில் பலவர்ண சித்திரங்களுடன் அமைந்த வெளியீடு
ஆங்கில தொடக்க நூல்

## பாலர் கதையும் பாட்டும்
விலை: ரூபா 20/-

அழகான சித்திரங்களுடன் பாலர்களுக்கான அறிவுக்கதைகள், பாட்டுக்கள் நிரம்பிய பதிப்பு.

இவை யாவும்,
இலங்கையில் இதுவரை வெளிவராத பாலர் சித்திர புதிய பதிப்புகள்.

சித்திரங்கள்: ஜோதி ஆட்ஸ் சிவகாசி (இந்தியா)
தொகுப்பு: ஆறுமுகம் கந்தையா B. A., J. P. அவர்கள் (அஷ்டலக்ஷ்மி அதிபர்)

தினத்தாள் கலண்டருக்கு நிகரான
அஷ்டலக்ஷ்மி பஞ்சாங்கக் கலண்டர் ரூபா 40/-
தினத்தாள் கலண்டர் ரூபா 70/-

தொகையாகப் பெற்றுக் கொள்வோருக்கு விசேட கழிவு உண்டு.

சிவா பிறின்டேர்ஸ்,
பதிப்பாளர்.
கைதடி.
[சி-9938]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரத்துவமடைந்த
திருமதி
**கணபதிப்பிள்ளை விசாலாட்சி**
(புங்குடுதீவு 6ஆம் வட்டாரம்)

தோற்றம்: 10 — 10 — 1910
மறைவு: 22 — 11 — 1993
திதி: 11 — 12 — 1994

ஓராண்டு சென்றதம்மா! நீங்கள் மறைந்தாலும் எங்கள் மனம் இன்னும் ஆறவில்லை. பாசத்துடனும், பரிவுடனும் எம்மை வளர்த்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகர் திருவடியை வேண்டி நிற்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

7, பிரப்பம்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(34093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## ஆய்வு நிதியம் அவசியமே!

ஆறுமுகநாவலர் குறித்தும் அவரது பணிகள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடியதாக "நாவலர் ஆய்வு நிதியம்" அமைக்கப்பட வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி பா. கோபாலகிருஷ்ணன் இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார்.

"நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே?" — என்று கேட்குமளவுக்கு அவரின் தமிழ்ப் பணி உயர்ந்து, விஞ்சி நிற்கிறது.

சைவமும் தமிழும் வளர்க்க அருந்தொண்டாற்றிய நாவலர், சைவ ஆசாரங்கள் தொடர்பாக கூறிய அல்லது பின்பற்றிய கருத்துக்கள், கோட்பாடுகள் கால ஓட்டத்திலே இப்போது சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கின்றன என்பது உண்மைதான். வர்ண வேறுபாடு—சாதிப் பாகுபாடு ஆகியவை தொடர்பாக அவரின் சித்தாந்தங்கள் விமர்சனத்துக்கு உள்ளாகியிருப்பதும் புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

எக்காலத்துக்கும் பொருந்தும் முப்பால்—தமிழ் மறை—நீதிநூல் எனப் போற்றப்படும் திருக்குறளே இன்று சர்ச்சைக்கு உள்ளாகியிருப்பதை நாம் பார்க்கிறோம். பெண்ணுரிமை, பெண் சமத்துவம் ஆகியவை தொடர்பில் திருவள்ளுவர் கூறி வைத்த கருத்துக்கள் கால ஓட்டத்திலே இன்று அர்த்தம் இழந்து போய் நிற்பதை—

ஆண் — பெண் சமத்துவத்தின் யதார்த்தத்தில் வெளிப்படுத்தும் சின்னங்களாக இன்று நேரடியாக எமது கண் முன்னே நடமாடும் பெண் போராளிகள் புரிய வைத்து நிற்கிறார்கள்.

அதற்காக நாம் திருக்குறளையோ திருவள்ளுவரையோ புறக்கணித்து விட்டோமா? இல்லையே.

அதுபோல நாவலரின் சைவ ஆசாரங்கள் பற்றிய கருத்துக்களில் சிலவற்றில் அவருடன் இணங்கிப் போக முடியாவிட்டாலும், சர்ச்சைக்கு அப்பாற்பட்ட அவரின் தமிழ்ப் பணியைப் போற்றுவது நமது கடன் அன்றோ?

நாவலரின் பணி பல்துறை சார்ந்தது.

சைவமும் தமிழும் தமது கண்ணெனப் போற்றி வளர்த்தவர். இளம்சமுதாயத்தின் பால் ஒழுக்க நெறிகளை ஊட்டி உயர்வுறச் செய்தவர்; எமது மண்ணின் சமூக, சமய; மொழி, கலாசாரப் பாதுகாப்புக்கு ஒரு சுவராகப் பணியாற்றியவர்; மேற்கு நாடுகளின் கலாசாரம் எம்மவர்கள் மத்தியில் ஊடுருவிப் பாய முற்பட்ட வேளையில், அதைத்தடுத்து நிறுத்தி, எமது கலாசாரத்தை — பண்பாட்டை — காப்பாற்றுவதற்கு உழைத்தவர்களில் ஒருவர்.

பிற்காலத்திலே அரசாங்கத்தினால் எமது நாட்டிலே புகுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையை பல தசாப்தங்களுக்கு முன்னரே தனி ஒரு மனிதராக எமது சமூகத்தில் அறிமுகப்படுத்தி முன்னுதாரண புருஷனாகத் திகழ்ந்தவர் நாவலர்.

தமிழ் நூல்கள் பல அச்சுவாகனம் ஏறுவதற்கு காரணமாக இருந்த நாவலர், இந்த விடயத்தில் தமிழ் நாட்டுக்கும் வழிகாட்டியாக விளங்கினார்.

இவ்வாறு பலதுறைகளிலும் விஞ்சி, விளங்கிய நாவலரை சரித்திரத்தோடு அப்படியே நாம் மறந்து விடுவது நாம் தமிழ்ச் சமூகத்துக்குச் செய்யும் இழுக்காக ஆகிவிடும்.

தென்னிலங்கையில் அநாகரீக தர்மபால போன்றோர் குறித்து பல்வேறு ஆய்வுகள், பல்வேறு மொழிகளில் நடத்தப்படுகின்றன.

ஆனால் வடக்கில்—

தமிழ் வளர்த்த நாவலர் போன்றோரின் பணிகள் வெளியுலகுக்கு உரிய முறையில் கொண்டு வரப்படாமல் மறைந்து கிடக்க விடப்பட்டிருக்கும் அவல நிலையை நாம் காண்கிறோம்.

எனவே நாவலரின் பணி குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள— அவரின் பணியின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் பன்மொழி நூல்களை வெளியிட — இந்து நாகரிகத் துறைத் தலைவர் கூறியது போல "நாவலர் ஆய்வு நிதியம்" அமைக்கப்படுவது அவசியமாகும்.

# ஒடுங்கிய பாதையில் ஓடும் சமாதான ரயில்!

# சந்திரிகா நேர்மையில் தெற்கிலும் ஐயம்?

ஒடுங்கிய பாதையில் ஓடும் ரயில் எந்தளவு வேகமாக ஓடினாலும், அகலப் பாதையில் ஓடும் ரயிலுடன் போட்டிக்கு நிற்கமுடியாது. முதலாவது ரக ரயிலின் வேகம் மட்டுப்படுத்தப்பட்டதே.

சந்திரிகா பிரதமராக இருந்த போது பதவியில் இருந்த அரசு அகலப்பாதை ரயிலாகவும், சந்திரிகா ஜனாதிபதியாக இருக்கும் அரசு ஒடுங்கிய பாதை ரயிலாகவும் விளங்கியதை. விளங்குவதைக் காண முடிகிறது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்



ஸ்ரீமாவோ

பதில் சந்திரிகாவை ஜனாதிபதியாகக் கொண்ட அரசாங்கமே வேகம் கூடிய அகலப் பாதை ரயிலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது மறு விதமாக அமைந்துவிட்டது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதில் சந்திரிகா உண்மையாகவே மன விருப்பம் உள்ளவரா? தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்பது அவரது உள்ளாந்தரச் சிந்தனையா? இதில் அவர் இதயசுத்தியுடன் இருக்கிறாரா?— என்ற கேள்விகள் அவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்களவர்கள் மத்தியில் ஒரு சாராரிடமும் எழுந்திருக்கிறது.

**பாப்பரசர் விஜயத்தோடு...**

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதில் அரசாங்கம் காட்டிய, காட்டும் தாமதமே சந்திரிகா குறித்து மேற்கூறிய சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் முதற்கட்டப் பேச்சுக்கள் நடைபெற்று சுமார் இரண்டு மாதங்களாகியும் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைக்கு திகதி நிர்ணயிக்க முடியாது தடுமாறுகிறது; ஆமை வேகத்தில் நகர்கிறது அரசு.

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய அரசாங்கம், இதனைப் பாப்பரசரின் விஜயத்தோடு செய்வதாக இணைக்க முனைவது அல்லது அதே காலத்துடன் அண்டிச் செய்வதற்குக் காத்திருப்பது சிறு பிள்ளைத்தனமானது.

சமாதானப் பேச்சுக்களை திட்டமிட்ட முறையில் ஒரு சீராக நடத்திக் கொண்டு, அவற்றின் பெறுபேறாக

## தாயாரின் செல்வாக்குக்கு உட்பட்டு செயற்படும் மகள் ஜனாதிபதி

போர் நிறுத்தம் செய்வதும், போக்குவரத்துப் பாதையைத் திறந்து விடுவதுமே உரிய ஒழுங்கு.

அதற்குப் பதிலாக பாப்பரசர் கொழும்புக்கு வருகிறார். அவரை யாழ்ப்பாணத்து மக்கள் தரிசிப்பதற்காக ஆனையிறவுப் பாதையை திறந்து விடப்போகிறோம்; போர் நிறுத்தத்தை முதலில் நடைமுறைப்படுத்துவதில்லை. பாப்பரசரின் விஜயத்தை அண்டி சண்டை ஓய்வைக் கொண்டுவந்து, நிலைமையை அவதானித்து, அதன் பின்னரே போர் நிறுத்தம் செய்யப்போகிறோம் என்றெல்லாம் அரசாங்கத் தரப்பினர் கூறுவது சமாதானத்தையும் அதற்கான முயற்சிகளையும் மலினப்படுத்தும் போக்காகவே தென்படுகிறது.

**நேர்மையில் சந்தேகம்**

சமாதானப் பேச்சையும், அதில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டிய விடயங்களையும் பாப்பரசரின் விஜயத்தோடு நேர அட்டவணைப்படுத்துவதால், அரசாங்கத்தின் உண்மைத் தனத்தில், நேர்மையில் சந்தேகம் எழுகிறது.

இத்தனைக்கும், இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும்; தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்; என்று 1986 ஆம் ஆண்டிலேயே கருத்துத் தெரிவித்தவர் சந்திரிகா குமாரதுங்கா.

வண. பிதா திஸ்ஸ பாலசூரியாவின் தலைமையில் இயங்கும் சமூக சமய நிலை

**அரசியல்**

யத்தின் ஆதரவில் அப்போது நடைபெற்ற "சமாதானம் எதற்காக?" என்ற தொடர் கருத்தரங்கில் சந்திரிகா ஒரு முறை பிரதான பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவரது கணவர் விஜயகுமாரதுங்கா உயிர் வாழ்ந்தார். அவரது சிறிலங்கா மக்கள் கட்சி சுறுசுறுப்பாக இயங்கியது. மக்கள் ஆதரவும் அதற்கு இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாற்றுக் கட்சியாக மாறி விடலாம் என்ற மதிப்பீடும் இருந்தது.

★ நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம். ஆனால் அந்தச் சமாதானம் எந்த விதமாகவும் அமையலாம் என்பதல்ல. பெரும்பான்மை சிங்கள மக்களுடைய விசேட கலாசார அம்சங்களைப் பேணும் அதே வேளையில், தமிழ் மக்களும் தமது சொந்த கலாசார தேசிய அடையாளத்தை நிலை நாட்டும் ஒரு சமாதானமே தேவை. இதுவே மனிதாபிமானமானதும், நடைமுறைச் சாத்தியமானதும் என்பதனாலேயே நாம் இத்தகைய சமாதானத்தை விரும்புகிறோம்.

★ போராளி இயக்கங்களைப் பொறுத்த வரையில், பிரச்சினையைத் தீர்ப்பதில் பெரும்பான்மை சமூகத்தினது, குறிப்பாக இப்போது பதவியில் உள்ள அரசாங்கத்தினது, நேர்மையை அவை சந்தேகிக்கின்றன.

**இரண்டும் இரண்டும் மட்டுமா நான்கு?**

★ இரண்டும் இரண்டும் சேர்ந்தால் மட்டுமே நான்கு என்று விவாதிக்கக் கூடாது. மூன்றும் ஒன்றும் சேர்ந்தாலும் நான்கு தான். ஆறிலிருந்து இரண்டைக் கழித்தாலும் நான்கே. அது போன்று பத்திலிருந்து ஆறைக் கழித்தாலும் நான்கு தான். ஆகையால் சமாதானத்தை அடைவதற்கு ஒரு வழிதான் உண்டு என்று, ஒரே கோணத்தில் பார்க்கக் கூடாது.

★ அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் பல நாடுகள் தமது தேசங்கள் பிளவுண்டு போகாமல் தவிர்த்திருப்பதற்கு உலகத்தில் எத்தனையோ உதாரணங்கள் உள்ளன.

சந்திரிகா அப்போதைய தமது பேச்சில் குறிப்பிட்ட கருத்துக்கள் இவை.

எட்டு வருடங்களுக்குப் பின்னர், அதிகாரக் கதிரையில் உட்கார்ந்த பின்னர் அவரது மனம் மாறியிருக்குமா? அதற்கு நியாயமில்லை. பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு சிங்கள மக்களிடம் ஆணை கேட்டவர் சந்திரிகா. தாம் கேட்ட அந்த ஆணையை 62 சதவீத வாக்காளர்கள் வழங்கியதன் மூலம் அவர் ஜனாதிபதியாகி இருக்கிறார்

### பாப்பரசர் விஜயத்துடன் பேச்சை இணைப்பது ஏன்?

அப்படியானால் அவர் ஓர் ஒடுங்கிய பாதை ரயிலாக வேகம் குறைந்து ஓடுவது ஏன்? சமாதான நடவடிக்கையை தாமதப்படுத்தினால் அரசாங்கத்தின் நேர்மை மீது மக்களுக்குச் சந்தேகம் உண்டாகும் என்பதும் அவருக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை. எட்டு வருடங்களுக்கு முன்னரே அவர் அதனை அறிந்திருந்தார்.

அப்படியாயின் பேச்சுவார்த்தையை தொடர்வதில் தாமதம் ஏன்? யார் காரணம்? எல்லாம் உள்வீட்டுச் சமாச்சாரம் தான்!

**தாய் ஆலோசகர்**

இன்னின்ன விடயங்களில் இப்படி இப்படித் தான் நடந்துகொள்ள வேண்டும்; இல்லையேல் ஆட்சியை நடத்துவது கஷ்டம் என்று தாயார் சிறிமாவோ, சந்திரிகாவுக்கு புத்தி சொல்லத் தொடங்கிவிட்டார்.

ஜனாதிபதி — மகள் — சந்திரிகாவும், பிரதமர்—தாய்— சிறிமாவோவும் சென் பிரிட்ஜெட் கல்லூரியின் பழைய மாணவிகள். அவர்கள் இருவருக்கும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் வரவேற்பு — விருந்துபசாரம் ஒன்று நடத்தினர். தாய் சிறிமாவோ அந்த வைபவத்துக்கு 30 நிமிட நேரத்துக்கு முன்னரே சென்றுவிட்டார். சந்திரிகாவோ சுமார் 45 நிமிட நேரம் பிந்திச் சென்றார்.

அந்த வைபவத்தில், மேடையில் வைத்தே, மகள் சந்திரிகா பிந்தி வந்தமையைக் கண்டிக்கும் விதத்தில் தாய் சிறிமாவோ விமர்சித்தார்.

அதேபோல, உத்தியோகபூர்வ அலுவல்களிலும் தாய் மகளை விமர்சித்து, வழிநடத்தும் பாங்கில் தமது செல்வாக்கைச் செலுத்துகிறார்!

பிரதமராக இருந்தபோது படையினரைக் கடுமையாக விமர்சித்த சந்திரிகா, சகல அதிகாரங்களுடனும் ஜனாதிபதியாக வந்த பின்னர் அவர்கள் "சொற்படி" நடக்க வளைந்திருப்பதும் அம்மாவினால் தானாம்!

**படையினர் தமது பக்கம் சேர்த்தனர்**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உட்பட, இப்போது மூத்த அதிகாரிகளாக உள்ள படை அதிகாரிகள் பலர் சிறிமாவோ பிரதமராக இருந்துகோலோச்சிய காலத்தில் கனிஷ்ட உத்தியோகத்தர்களாக இருந்தவர்களாம். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர்கள் தாய் மூலமாக சந்திரிகாவை தமது பக்கமாக்கிக் கொண்டு விட்டனர்.

தாம் ஜனாதிபதியானதும்



சந்திரிகா

இராணுவத்தில் பல மாற்றங்களைச் செய்வதற்குச் சந்திரிகா திட்டமிட்டிருந்தார் என்றும், ஆனால் அவரது "ஆலோசகராக" மாறியுள்ள தாய் சிறிமாவோவின் தலையீட்டால் மாற்றம் எதனையும் செய்யாமல், பலருக்குச் சேவை நீடிப்பு வழங்க வேண்டியதாயிற்று என்றும் விடயமறிந்த வட்டாரங்களில் பேசப்பட்டது.

இந்த வகையில் தான், ஆயுதக் கொள்வனவில் தறிகெட்டு நடந்ததாகச் சொல்லப்படும் ஹமில்டனுக்கு ஆறு மாத காலச் சேவை நீடிப்புக் கிடைத்ததாம்! இதே வரிசையில் ஓய்வில் அனுப்பப்படுவர் என எதிர்பார்க்கப்பட்ட பல படை அதிகாரிகள் சேவை நீடிப்புப் பெற்றிருக்கிறார்கள்!

சேவை நீடிப்புப் பெற்றாலும் பரவாயில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையின் வேகத்தைக் குறைப்பதற்கு ஏற்ற வகையில் காரியங்களை நடத்துவதிலும் அவர்கள் வெற்றி கண்டு வருகிறார்கள்!

சந்திரிகா தமது தாயின் செல்வாக்குக்கு உட்பட்டதால், சமாதான முயற்சியின் வேகம் குறைந்ததை அறிந்து தான் நேற்று முன்தினம் சமாதானப் பேரணி ஒன்று

**உதயகாந்தன்**

தெற்கில் நடத்தப்பட்டதோ? (கொழும்பில்).

இந்தப் பேரணியை முன்னின்று நடத்தியவர்களில் பலர் சந்திரிகாவின் வட்டகையைச் சேர்ந்தவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர் வை. பி. டி. சில்வா, பத்திரிகையாளர் மனோரஞ்சிதன், சுனித்திரா பெரேரா, "யுக்திய" ஆசிரியர் சுனந்த தேசப்பிரியா ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

● சமாதானப் பேச்சுவார்த்தை தாமதப்படுவதால் சமாதானத்தை எட்ட முடியாமற் போய்விடுமோ என்ற சந்தேக நிலை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களது நம்பிக்கை தளராமல் புத்துணர்ச்சி கொடுக்கவே இந்த சமாதானப் பேரணி.

● அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானத்தை அடைவதில் நேர்மையாக இருக்க வேண்டும்.

மக்கள் பங்களிப்பு அதற்குத் தேவை என்பதை உணர்த்தவே இந்தப் பேரணி.

● தென்னிலங்கைக் கிராமப்புற மக்கள் சண்டையை அல்ல சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பதனையும் இந்தப் பேரணி எடுத்துக் காட்டுகிறது.

● சமாதான முயற்சி— பேச்சுவார்த்தை—பெரு வேகம் அடைய வேண்டும். என்பதனை அரசுக்கு உணர்த்தவே இந்தப் பேரணி. எல்லா இன மக்களும் நிம்மதியாக வாழ வழி செய்யும் நியாயமான தீர்வு இனப்பிரச்சினைக்குக் காணப்பட வேண்டும்.

சமாதானக் கூட்டத்தில் பேசிய பிரமுகர்கள் இந்தக் கருத்துக்களை வெளியிட்டனர்.

மூத்த சந்ததியைச் சேர்ந்த தாயின் செல்வாக்கிலிருந்து சந்திரிகாவை வெளியே கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியாகக் கூட இந்தச் சமாதானப் பேரணியை ஒரு வகையில் நோக்கலாம்.

இனப்பிரச்சினை, சமாதானப் பேச்சுவார்த்தை ஆகியவற்றில் மட்டுமன்றி ஏனைய பல விடயங்களிலும் மகளுக்கும், தாய்க்கும் கருத்து முரண்பாடுகள் நிலவுகிறதாம். இதனை சந்ததி இடைவெளித் தொல்லை என்று கூறலாமா?

மகன் அநுராவை தமது பக்கம் சேர்ப்பதில் தாய் சிறிமாவோ மிக ஆர்வம் காட்டுகிறார். ஆனால் மகள் சந்திரிகா அதனை விரும்பவில்லை.

இத்தகைய கருத்து முரண்பாடுகளால் அலரிமாளிகையில் இருந்து ஜனாதிபதி மாளிகைக்கு இடம் மாறுவதற்கு சந்திரிகா உத்தேசித்திருக்கிறாராம். மிக விரைவில் அது நடக்கலாம் என்று நம்பப்படுகிறது

அவர் எங்கு மாறினாலும் மக்களுக்கு என்ன, கவலை?! மக்களின், நாட்டின், பிரதான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சந்திரிகா தமது சொந்த ஆளுமையையும், திறனையும் காட்டினால் மட்டுமே அவரால் பதவியில், அரசியலில் பிரகாசிக்கமுடியும். தமது முத்திரையைப் பதிக்க முடியும். ★

உதயன் ஞாயிறு சிறப்பகம்

## உலகத் தமிழ் மாநாட்டு இலச்சினை: இலங்கைக்கு அதில் இடமில்லை

தஞ்சாவூரில் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான பல்வேறு தயாரிப்புகளும் வெகு மும்முரமாக நடைபெறுகின்றன.

மாநாட்டின் தொடக்க விழாவில் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவும் நிறைவு விழாவில் பிரதமர் நரசிம்மராவும் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

இம் மாநாட்டை ஒட்டி விசேஷ தபால் தலை ஒன்றையும் நாணயம் ஒன்றையும் வெளியிடுவது குறித்து இந்திய நிதி மந்திரி மன்மோகன் சிங் சம்மதம் தெரிவித்து இது குறித்து பிரதமருக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

ராஜராஜ சோழன் உருவம் கொண்ட தபால் தலை வெளியிடப்படும் என்று தகவல் மந்திரி சுக்ராம் கூறினார். ஒரு ரூபா நாணயம், திருவள்ளுவர் உருவம் பதித்ததாக அமையும்.

**இலச்சினை**

உலகத் தமிழ் மாநாட்டு இலச்சினை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

வட்டவடிவ இலச்சினையில் எடுத்த எடுப்பில் திருவள்ளுவர் நடுநாயகமாகத் திகழ்கிறார். அவரை முன்னிறுத்தி அவர் பின்னணியில் உலக வரைபடம் இருக்கிறது.

இப்படத்தில் தமிழ் பேசும் நாடுகள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. ஆனால் இலங்கை அது இருக்க வேண்டிய இடத்தில் இல்லை; ஒரு புள்ளி கூட இடப்படவில்லை.

அவ்வளவாகத் தமிழ் வளராத, அல்லது இப்பொழுது தான் வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகள் இலச்சினை வரைபடத்தில் உள்ளன.

அதேவேளையில் தமிழ் ஓங்கி வளர்ந்துள்ள இலங்கை குறிக்கப்படாமல் இருப்பது வருத்தத்துக்குரியது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முதலில் மலேசியாவில் நடைபெறுவதற்குக் காலாயிருந்தவர் ஒரு இலங்கைத் தமிழரான தவத்திரு. தனிநாயகம் அடிகளார் என்பதையும் மனத்திற்கொள்ளும் போது இந்தக் குறைபாடு தெற்றெனத் தெரிகின்றது.

படத்திலிருந்து இலங்கை வேண்டுமென்றே விடப்பட்டதா அல்லது தவறுதலாக விடப்பட்டதா என்பது தமிழர் தம் நெஞ்சில் இயற்கையாகவே எழக்கூடியதோர் கேள்வியாகும்.

இலச்சினையின் மேலே மூவேந்தர்களின் கொடிச் சின்னங்கள்; கீழே தமிழகத்து நெற்களஞ்சியமான தஞ்சையில் மாநாடு என்பதை உணர்த்த நெற்கதிர்கள்; வள்ளுவருக்கு வலப்புறத்தில் தஞ்சைப் பெரிய கோயில்; இடப்பக்கத்தில் அறிவுசார் தஞ்சைப் பல்கலைக்கழகக் கட்டட முகப்பு. இன்னும் ஓரிரண்டு சித்திரங்கள் இலச்சினையில் உள்ளன.

மேலும் சித்திரங்களுக்கு வெளியிலே கறுப்பு வட்டத்தில் "எட்டாவது உலகத் தமிழ்மாநாடு - தஞ்சாவூர் 1995", "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வாசகங்கள் இருக்கின்றன.

**தங்கு'மிடவசதிகள்**

மாநாட்டுக்கு வரும் பொது மக்கள் தங்குவதற்கு என 5 பெரிய கொட்டகைகளை அமைப்பதுடன் வெளிநாட்டவர்களைக் கருத்திற்கொண்டு தஞ்சைப் புறநகர்ப் பகுதியில் 453 குடியிருப்புகளும் பல்கலைக்கழகப் பிராந்தியத்தில் 404 தங்குமிட வசதிகளும் 25 கோடி ரூபாவுக்கு மேலான செலவில் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது மேற்படி குடில்களின் மொத்த அறைகள் ஆயிரமாகும்

அதே நேரத்தில் மாநாட்டு மலர்க்குழுத் தலைவரும் தஞ்சாவூரை மாநாட்டுக்குத் தயார்ப்படுத்தும் நெறியாளருமான அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள பிரத்தியேக நேர்முகத்தில் "23 வெளிநாடுகளைச் சேர்ந்த 250 தமிழ்ப் பேராசிரியர்கள் கலந்து கொள்கிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, பின்லாந்து இஸ்ரேல், ஜப்பான், சுவீடன், மொரிசியஸ், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுடன் இலங்கையும் கலந்து கொள்ளும்" எனத் தெரிவித்திருக்கிறார். இந்நாடுகளிலிருந்து 25 தமிழ் அறிஞர்கள் சிறப்பு அமைப்பாளர்களாகவும் திகழ்வர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து எத்தனை பேர் அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பது பற்றி அவர் தெரிவிக்கவில்லை.

**42 தலைப்புகளில் கருத்தரங்கு**

மாநாட்டில் கருத்தரங்கு 42 தலைப்புகளில் நடக்கவுள்ளது எனவும் இதற்காக 700 ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அறிய வருகின்றது.

உலகத் தமிழ்மாநாட்டை ஒட்டி தஞ்சாவூரில் பல புதிய வசதிகள் செய்யப்படுகின்றன. தஞ்சாவூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சிவகங்கை மற்றும் ராஜப்பா பூங்கா[illegible]வில் அழகு படுத்தப்படுகின்றன. ★

-தொகுப்பு:
-பாரதிநேசன்-

## கனிஷ்ட தொழில் நுட்ப தேர்வு

யாழ்ப்பாணம், டிச. 11

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவிருக்கும் ஆண்டு 9 கனிஷ்ட தொழில் நுட்பத் தேர்வுக்குத் தோற்றும் மாணவரின் வரவு இடாப்புப் பட்டியலைப் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வரவு இடாப்புடனும் அதன் பிரதி ஒன்றுடனும் தத்தமது கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குச் சந்திக்குமாறு யாழ். வலயம் 1 கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

வரவு இடாப்பு பிரதிகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு முன் தம்மிடம் தவறாது சேர்ப்பிக்குமாறும் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை அவர் கேட்டுள்ளார். (இ-4)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.வணிக ஊழியர் கழக விளையாட்டு அணிக்கும் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டு அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (இ-4)

## படிப்பு விடுப்பு பத்திரம்

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சியில் கல்வி கற்று இரண்டாம் வருடப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தங்கள் படிப்பு விடுப்பு பத்திரங்களை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது [இ-4]

## ஐ. தே. க உதவி செயலாளர் குறைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிச் செயலாளர் பதவிகளை குறைப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீகோத்தா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்சமயம் 6 உதவிச் செயலாளர்கள் உள்ளனர் இவர்களின் எண்ணிக்கையை இரண்டாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஒகன் - கிற்றார் இசைப்பயிற்சி நிலையம்
## புதிய வகுப்புகள் ஆரம்பம்

காலம்: 15-12-1994
இடம்: மாலு சந்தி, அல்வாய் வீதியில் இருந்து 300 யார்.
ஆசிரியர்: K. இலங்கேஸ்வரன்
[ராஜன்ஸ் இசைக்குழு உறுப்பினர்]
[34147]

# மரண அறிவித்தல்கள்

## க.க. நல்லையா மாஸ்ரர்

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், பிரம்படி கொக்குவிலை புகுந்த இடமாகவும் கொண்ட க.க. நல்லையா மாஸ்ரர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) காலமானார்.

இவர் திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி நல்லம்மா, திருமதி செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி பவளரெட்ணம் பாலசுந்தரம் (ஆசிரியை, கொக்குவில் ஸ்ரீராமகிஷ்ண சாரதா மகளிர் கல்லூரி), திருமதி மு. யோகேஸ்வரி (கல்வி வெளியீட்டு திணைக்களம், கொழும்பு), சிவராசா (இலங்கை வங்கி, பிரதான கிளை, யாழ்ப்பாணம்), ஈஸ்வரராசா, திருமதி ஸ்ரீசரோஜினிதேவி, கமலேஸ்வரி, சிவானந்தராசா, சற்குணராசா (ஜேர்மனி), திருமதி மோ. பத்மினி, திருமதி ர. பத்மநாகபூசணி, ஸ்ரீஸ்கந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தா. பாலசுந்தரம் (கெங்கா என்ரபிறைஸ், யாழ்ப்பாணம்), த.முருகானந்தா (மில்க் வைற்), திருமதி சி. இரத்தினாபதி, திருமதி ஈ. சந்திராதேவி, ஸ்ரீபாலசந்திரன் (சிவசக்தி பேக்கரி, உரும்பராய்), ரவீந்திரராசன் (சிந்து பல்பொருள் நிலையம், திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தன், அகிலா, பிரதீபன், கபிலதீபன், பிஸ்பதீபன், தீபா, குந்தவி, மயூரன், மதுமதி, ஹரிகரன், கஜலக்சி, மயூரன், நிலக்ஷினி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல:
திரு. க.ந. சிவராசா
(மகன்)

சற்குணராசா & பிறதேஸ்,
பிரம்படி லேன்,
கொக்குவில். (34143)

"நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்"

## சூசைப்பிள்ளை சுவக்கீன்

(இளைப்பாறிய கடற்படைத்தள உத்தியோகஸ்தர், S. L. Navy திருகோணமலை)

திருகோணமலை, சின்னக்கடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது, எபனேஸர் ஜெப நிலையம் கனகரெட்ணம் வீதி, வட்டுக்கோட்டையில் வசித்தவருமான சூசைப்பிள்ளை சுவக்கீன் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவர் வட்டுக்கோட்டை எபனேஸர் ஜெப நிலையத்தின் உதவிப் போதகர், சு. யோசப்பத்திநாதன் சு. யோசப்பாக்கியநாதன் (நயினார்) அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது அடக்க ஆராதனை இன்று (11-12-94) ஞாயிறு 3 மணிக்கு எபனேசர் ஜெப நிலையம் வட்டுக்கோட்டையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உதவி போதகர்: சு. யோசப்பத்திநாதன்
(மகன்)

எபனேசர் ஜெப நிலையம்,
கனகரெட்ணம் வீதி,
வட்டுக்கோட்டை. (34142)

## செபஸ்ரியாம்பிள்ளை பர்ணாந்துப்பிள்ளை
[செல்லத்துரை]

மாதகல் தோமயர் கோவிலடியைப் பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது சந்தை வீதி, மானிப்பாயில் வசித்தவருமான செ.பர்ணாந்துப்பிள்ளை நேற்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் மேரி யாகிறெற்றின் அன்புக் கணவரும், யேசுநாயகம், வாசமலர், இராஜநாயகம் (சுண்டுக்குழி), செல்வக்குமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை, மற்றும் மேரி இமாகுலேற்றா, அல்வினம்மா, றாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், புஸ்பாகரன், றூபினி, சறோஜினி, றொயலின், விஜிதா, நிலானி, ஜெனிங்ஸ், சுதர்ஷினி, சுகந்தினி, ஜான்சன், யோகராஜா, ஜெயா ஆகியோரின் அன்புப் பேரனும், றஜீவன், றொசானியா, பபிஸ்ரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [11-12-94] பிற்பகல் 3 மணிக்கு பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. யேசுநாயகம்
[மகன்]

சந்தை வீதி,
மானிப்பாய். [34145]

## திருமதி இமல்டா பீற்றசன்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியையும், தற்போதைய பகுதி நேர ஆசிரியையும். யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்)

திருமதி இமல்டா பீற்றசன் அவர்கள் 8-12-94 அன்று பதுளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. ஹரி பீற்றசன் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், றொசிற்றா, பிரான், வென்ரன் (German), மொறின், பப்சி, புஞ்சி, குட்டி ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் பதுளையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி றொசிற்றா கனகசுந்தரம்
(மகள்)

99/3, புகையிரத நிலைய ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (34150)

# மோசடி முகவர் நிலையத்துக்கு உதவ போலி வைத்திய நிலையம்

## வாழைத்தோட்டப் பொலீஸார் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிச. 11

கொழும்பு மத்தி டயஸ் பிளேஸில் கடந்த ஒரு வருடகாலமாக இயங்கிவந்த — மோசடி வேலைகளில் ஈடுபட்டிருந்த — முகவர் நிலையத்திற்கு அருகில் போலி வைத்திய நிலையம் ஒன்றும் செயற்பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தகுதியற்றவர்கள் இந்த நிலையத்தை நடத்தி வந்ததாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வைத்திய சான்றிதழ்கள் இந்த நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளன என்று வாழைத் தோட்ட பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கள், அனுமதிப் பத்திரங்கள், அடையாள அட்டைகள், அரசாங்க உத்தியோகபூர்வ றபர் முத்திரைகள் உட்பட பல பொருள்கள் பொலீஸாரினால் இங்கு கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

### புதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்களை அரசு பெற்றுள்ளது. கடன் அடிப்படையில் இந்த வாகனங்கள் இவர்களுக்கு வழங்கப்படும்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பஜிரோ வாகனங்களை கொள்வனவு செய்த எம். பிக்களுக்கு புதிய 'பஜிரோ' வாகனங்கள் வழங்கப்படமாட்டா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

### ஆந்திராவில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குள் மாநிலத்தில் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வரும் என்று என்.டி.ராமராவ் அறிவித்துள்ளார்.

தேர்தலில் காங்கிரஸ் கட்சி சந்தித்துள்ள படுதோல்வியை அடுத்து ஆந்திர மாநில முதலமைச்சர் கே.விஜயபாஸ்கர ரெட்டி நேற்று தமது ராஜிநாமா கடிதத்தை மாநில ஆளுநரிடம் கையளித்தார். ராஜிநாமாவை ஏற்றுக் கொண்ட ஆளுநர் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை தொடர்ந்து பதவியில் இருக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை—

தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் என்.டி. ராமராவுக்கு பிரதமர் நரசிம்மராவ் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவில் நரசிம்மராவின் மகனும் தேர்தலில் தோல்வி அடைந்துள்ளார். காங்கிரஸ் வேட்பாளராக அவர் போட்டியிட்டிருந்தார். (ஐ)

# உள்ளூராட்சி அலுவலகம் மாத இறுதியில் மூடப்படும்

## டிவகலாலா மாகாணசபைக்கு

யாழ்.மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் மூடப்பட்டு, அத்திணைக்களத்தின் பணிகளும், அங்கு பணியாற்றிய ஊழியர்களும் பிரதேச செயலகங்களுக்கு இடம் மாற்றப்படுவதை அடுத்து —

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவும் அப்பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்,

ஜனவரி முதலாம் திகதி முதல் திருகோணமலையில் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு கடமைக்குச் சமூகம் தரும்படி அவர் பணிக்கப்பட்டுள்ளார்.

அனேகமாக மாகாண சபையின் உள்துறை அமைச்சின் அல்லது கல்வி அமைச்சின் அல்லது இரண்டு அமைச்சுக்களினதும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிக்கு அவர் நியமிக்கப்படக் கூடும் என்ற தகவல் தெரியவந்தது. (உ)

### இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ காங்கிரஸ் — 36
★ பாரதிய ஜனதா — 40

சிக்கிம்

மொத்த இடங்கள் — 32
★ சிக்கிம் ஜனநாயக முன்னணி — 19
★ சோஷலிஸ கட்சி — 10
★ காங்கிரஸ் — 01
★ சுயேச்சைகள் — 02

நேற்று முன்னிரவு வரை வெளியான முடிவுகளின் படி ஆந்திரா, கோவா ஆகிய இரு மாநிலங்களிலும் கட்சிகளின் நிலைவரம் வருமாறு:

ஆந்திரா

மொத்த இடங்கள் — 292
★ தெலுங்கு தேசம் — 206
★ காங்கிரஸ் — 23

கோவா

மொத்த இடங்கள் — 40
★ காங்கிரஸ் — 14
★ மகாராஷ்டிரா கோமன்டட் — 10
★ பாரதிய ஜனதா — 02
★ ஏனையவை — 04

### ஜி. சீ. ஈ.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெறவிருக்கும் ஆண்டு 9 கனிஷ்ட தொழில்நுட்பத் தேர்வுக்கான வினாத்தாள்களுடன் மேற்படி பரீட்சை முடிவுகளும் இன்று கொழும்பிலிருந்து விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட உள்ளன.

கப்பல் வசதியைப் பொறுத்து இன்று மாலை அல்லது நாளை முடிவுகள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என தெரிவிக்கப்பட்டது.

### சிப்பாய்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

வெலிஓயா (மணலாறு) ஜயந்திபுர முகாமில் கடமையாற்றும் சுனித்தா மாணகெகர (23 வயது) என்ற சிப்பாய் விடுமுறையில் தமது வீட்டுக்கு வந்திருந்தார். வீட்டில் ஒரு பகுதியில் தம்முடன் கொண்டு வந்த கிரனேட்டுகளை வைத்திருந்தார். இதில் ஒன்று தவறுதலாக விழுந்து வெடித்தது. இதனால் அவரும் அவரது மாமியாரும், 12 வயது மைத்துனரும் பலியானார்கள்.

சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்த பொலீஸார் மற்றும் இரு கிரனேட்டுகளை கண்டு பிடித்தனர். (ஒ)

### மட்டக்களப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணி நேரத்தில் மட்டக்களப்பில் 78 மி.மீ. மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் 184 மி. மீ மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை— அம்பாறை மாவட்டத்திலும் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது. வெள்ளத்தினால் அங்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரமான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. (இ-ஐ)

### வங்காலையில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லது திலீப் (முத்துச்சாமி சந்திரகுமார் — மட்டக்களப்பு)

★ லெப்டினன்ட் பாண்டு (யாக்கோபு மரியகிறிஸ்டின் — மன்னார்)

இரண்டாம் லெப்டினன்ட் ராகபவான் (மரியதாஸ் பத்திநாதன் — முருங்கன்)

## பெண் பாடகிகள் தேவை

"ராஜன்ஸ்" இசைக் குழுவினரின் நிகழ்ச்சிகள் மற்றும் ஒலிப்பதிவுகளில் இணைந்து பணியாற்ற பெண் பாடகிகள் தேவை. ஆர்வமுள்வர்களள் சுய விவரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

"ராஜன்ஸ்"
242, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(36441)

புதுப் பொலிவுடன் ஆரம்பமாகிறது

## ஐடியல் கல்வி நிலையம்

இல. 42, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை.
(தேசிய சேமிப்பு வங்கி அருகில்)

ஆண்டு 6 முதல் 11 வரை

ஆரம்பம்: **12-12-94** திங்கள்
பி. ப. 3 மணி

விஞ்ஞானம்: — திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம்: — திரு. S. வாமதேவன்
— திரு. S. சண்முகநாதன்
ஆங்கிலம்: — திரு. T. சகாதேவன்
தமிழ்: — திரு. S. கதிர்காமத்தம்பி
சமூகக்கல்வி: — திரு. M. இக்னேஷியஸ்

விசேட ஆங்கில, சிங்கள வகுப்புக்களும் ஆரம்பமாகும்.
(34139)

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்

## தடை நீக்கம்

இனிப்பு வெதுப்பி, பணிஸ், கேக் (அடைகேக் உட்பட) போன்ற ஆடம்பர உற்பத்திகளுக்கு விதிக்கப்பட்டதடை 12-12-94 திங்கட்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

மா தட்டுப்பாடு ஏற்பட்ட காலப்பகுதியில் வெதுப்பியை கூடுதலாக உற்பத்தி செய்யவேண்டும் என்ற நோக்குடன் விதிக்கப்பட்ட தடைக்கு ஒத்துழைப்பு கொடுத்த சகல வெதுப்பக உரிமையாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மாவட்ட தலைவர்
யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(சி/9807)

## கிக்ஸ் அக்கடமி

தாவடி.
Spoken English
By
BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்:
15-12-1994
9-30 மணிக்கு
(8075)

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

464, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி **B.A I. B.A II** இற்கான விரிவுரைகள் **17-12-1994** இல் ஆரம்பமாகின்றன.

முற்கூட்டியே பதிவு செய்யவும்

பாடங்கள்

1. ஆங்கில இலக்கியம்
2. அரசியல் விஞ்ஞானம்
3. கிறிஸ்தவ நாகரீகம்
4. மெய்யியல்

**E. C. E. [Advanced Level]** வகுப்புக்குரிய ஆங்கிலம் **[English]**
**14-12-1994** புதன்கிழமை ஆரம்பமாகும்
உடனே பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குநர்.
(சி/9937)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திலகவதி இராசதுரை

சங்கானையை வசிப்பிடமாகக் கொண்ட இராசதுரை (பத்தர்) அவர்களின் மனைவி திலகவதி அவர்கள் நேற்று காலமானார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று 11-12-1994 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
இராசதுரை
(பத்தர்) (கணவர்)

சங்கானை. (34151)

## திருமதி சுந்தரம்பிள்ளை நேசம்மா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நேசம்மா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் (Radio Grapher), தவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, இராசபூரணி ஆகியோரின் மாமியாரும், செல்வகுமார், சந்திரகுமார், இராசகுமார், ரவீந்திரன் (M. P. C. S. நல்லூர்), பவானி, ரவிமோகன் (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), ரஜனி (கனடா), ரவிகரன் (கனடா), சாமினி (சுவிஸ்), நந்தினி (ஜேர்மனி), ரவிக்குமார் (லண்டன்), தாரணி (யாழ். நுண்கலைப் பீடம்), வசந்தா, இராஜேந்திரம் (யாழ். ஹற்றன் நாஷனல் வங்கி), சசிமதி, சாந்திலா, ஏகாம்பரநாதன், தமயந்தி, சிறீரஞ்சன், வசந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-12-94) கொக்குவில் காங்கேசன்துறை வீதி, 155 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

உறவினரும், நண்பரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. நடராசா
[மருமகன்]

155, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில். [34149]

## கந்தையா தம்பிமுத்து

சுதுமலை, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு கரந்தனை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிமுத்து அவர்கள் காலமாகிவிட்டார். இவர் மாசிலாமணியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, சுப்பிரமணியம் (லண்டன்), இந்திராதேவி, அன்னலட்சுமி, காலஞ்சென்ற கணேசகுமார், ஜெயக்குமார் (சுவிஸ்), பாலகுமார் (இத்தாலி), விஜயகுமாரி (கனடா), நந்தகுமார் (பிரான்ஸ்), சாந்தகுமாரி (லண்டன்), சிவகுமார் (பிரான்ஸ்), கிரிஜா (லண்டன்), வனஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்பலம், றஜனி, துரைவீரசிங்கம், சண்முகராஜா, பிரேமா, லவிதா, பாலகிருஷ்ணன், சாந்தி, ஜெயந்தகுமார், சுகிர்தா, சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-12-94) ஞாயிற்றுக்கிழமை இவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக மு. ப. 11.00 மணியளவில் இழங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. துரைவீரசிங்கம்
(மருமகன்)

உரும்பிராய் கிழக்கு,
கரந்தன். (34141)

## திருமதி கெங்காதரம் இராசமணி

பருத்தியடைப்பு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், 41/67, செம்மணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த காலஞ்சென்ற கெங்காதரம் அவர்களின் மனைவி இராசமணி நேற்றுக் காலமானார்.

இவர் திருமதி மங்கையர்க்கரசி [இணுவிலம்மா] யின் சகோதரியும், கிருஷ்ணவேணியம்மா [மட்டக்களப்பு], காலஞ்சென்ற தெய்வநாயகி, கெங்கேஸ்வரி, கல்விச்செல்வி [ஜேர்மனி] ஆகியோரின் தாயாரும், கதிரேசு [பழனி மட்டக்களப்பு], சிவராசா [ஓவசியர்], ஜம்புகேஸ்வரன், வேதநாயகம் [வெதம்], மரியநாயகம் [ஜேர்மனி] ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11-12-94 இன்று பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சிறீதரன்
(பேரன்)

[34148]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-12-94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org